E Paper

மின்னிதழ்

2022 ஜூலை 30 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

1932 - 2022

வரு. 90 இல. 178 | Saturday 30, July, 2022 | 11 பக்கங்கள்

அரசாங்க வர்த்தமானி

தினகரன் வாரமஞ்சரி யில்

31.07.2022 முதல்

மீண்டும் வெளிவருகிறது

## அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களையே பொலிஸார் கைது செய்கின்றனர்



அடையாளம் காணப்பட்டு ஆதாரத்துடனேயே கைது - ஜனாதிபதி

“அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் நடவடிக்கைகளிலே பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனவும் இதற்கு எதிராக எவரும் கூக்குரல் எழுப்ப முடியாது" எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் நேற்று(28) கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அஹிம்சை வழியில் போராடியவர்களில் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர்.

அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். "அமைதி வழியில் போராட்டம் செய்தவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கை களையும் 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியால்

## IMF உடனான பேச்சுக்களில் எதிர்பார்த்தளவு முன்னேற்றம்



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்து, சிறந்த பொருளாதார நடைமுறையை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்கள் உயர் முன்னேற்றத்தை அடைந்துள்ளன என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 06

போராட்டக்காரர்களால் கண்டெடுக்கப்பட்ட

## ஜனாதிபதி மாளிகையிலிருந்த பணம் நீதிமன்றில் ஒப்படைப்பு



ஜனாதிபதி மாளிகையின் 4 ஆம் இலக்க அறையிலிருந்து போராட்டக்காரர்கள் கண்டெடுத்த கோடிக்கணக்கான பணம் நேற்று (29) கொழும்பு – கோட்டை நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது. கொழும்பு மத்தி வலய குற்றத் தடுப்பு விசாரணை பணியகத்தினால் இந்த பணம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது. ஒரு கோடியே 78 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் , போராட்டக்காரர்களால், கோட்டை பொலிஸ் 06

20 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டோரில்

# கொவிட் தடுப்பூசி பெறாத 60 இலட்சம் பேர் நாட்டில்

சுகாதாரப் பிரிவின் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



**தடுப்பூசி வகை தேவையான அளவில் இருந்தும் அதனை முறையாகப் பெறாதிருப்பது கவலைதரும் விடயமாகும்**

இந்நாட்டில் 20 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டோரில் 60 இலட்சம் பேர் இன்னும் கொரோனா பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை என தொற்று நோய் ஆய்வு பிரிவின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட ஒரு கோடியே 40 இலட்சம் பேர் இருப்பதாகவும் அவர்களில் 80 இலட்சம் பேர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

20 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு நபரும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது சிறந்ததென சுகாதார பிரிவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் முதலாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்ற பின்னர் மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியையும் பெற முடியுமென அவர் கூறினார்.

60 வயதுக்கு மேற்பட்ட நபர்கள், தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் கொவிட்19 பூஸ்டர் ஊசியை பெற்றுக் கொள்வதன் மூலம் வைரஸிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியுமென கூறிய அவர் அவ்வாறானவர்கள் உடனடியாக இந்த தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார்.

முதலாவது, இரண்டாவது டோஸ் கொவிட்19 தடுப்பூசியைப் பெற்ற நபர்களுக்கு தற்போது அந்த வைரசுக்கு எதிராக போராடுவதற்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக காணப்படுவதாகவும் பூஸ்டர் தடுப்பூசி போதுமான அளவு அரசு சுகாதார களஞ்சியசாலைகளில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். பூஸ்டர் தடுப்பூசி தேவை யானவர்களுக்கு 06

## இலங்கைக்கு உதவ கமல்ஹாசன் விருப்பம்



பிரபல தென்னிந்திய சினிமா நடிகரும் இயக்குனருமான ‘பத்ம பூஷன்’ கமல்ஹாசன் தனது நலன் புரி சங்கத்தின் மூலம் இலங்கைக்கு உதவ விருப்பம் தெரிவித்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன், சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஷ்வரனுடனான கலந்துரையாடலின் போது தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

கலாநிதி டி.வெங்கடேஷ்வரன் விடுத்த அழைப்பின் பேரில், கமல்ஹாசன் ஞாயிற்றுக்கிழமை (24) சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்திற்கு விஜயம் செய்தார். இந்த பயணத்தின் போது, 06

சகல ஆர்ப்பாட்டங்களிலிருந்தும்

**லிபரல் சகோதரத்துவ அமைப்பு விலகல்** 03

## சுற்றறிக்கைகள் மூலம் தண்டனை வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும்



கண்மூடித்தனமான சுற்றறிக்கைகள் மூலம் தண்டனை நடைமுறைப்படுத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அத்துடன், மக்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நெருக்கடியில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் (28) எதிர்கட்சித் தலைவர் 06

## விடுமுறைகளின்றி பாடசாலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்




பாடசாலைகளுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் விடுமுறை வழங்காது நவம்பர் மாதம் இறுதி வரை பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலை காரணமாக பாடசாலைகளுக்கு அவ்வப்போது விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், கல்வி செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

## நாட்டில் கொவிட்- தொற்று 10 வீதத்தால் அதிகரிப்பு

மக்களை விழிப்பாக இருக்க எச்சரிக்கை



நாட்டில் கொவிட் 19 பரவல் சுமார் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதால் சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றி மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் டொக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். தினமும் 4 முதல் 5 கொவிட் இறப்புகள் பதிவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் கொவிட்19 நோய்க்கு உகந்த நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதால், கொவிட்19 நோயாளிகளை வீட்டிலேயே நிர்வகிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ள அவர், கொவிட்19 06

## ஜனாதிபதியின் கொடியை திருடிச் சென்றவர் சிக்கினார்!

சிசிடிவி ஆதாரம் மூலம் கைது



மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் போது கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கொடியை திருடிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆக்கிரமித்தபோது அந்த நபர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கொடியைத் திருடியுள்ளார். 06

## பாராளுமன்ற அமர்வுகள் பற்றிய விசேட வர்த்தமானி வெளியீடு



பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று முன்தினம் (28) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பாராளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது.

இலங்கைக்கு நிதியுதவியை வழங்க

## பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவை

உலக வங்கி அறிவிப்பு



பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க திட்டமிடவில்லை என தெரிவித்துள்ள உலக வங்கி, இதற்கு பொருளாதார ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்ட ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவை எனவும் தெரிவித்துள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## நாட்டில் நாளாந்தம் பட்டினியால் வாடும் ஒரு இலட்சம் குடும்பங்கள்



இலங்கையில் ஒரு இலட்சம் குடும்பங்கள் தினமும் உணவு கிடைக்காமல் பட்டினியில் வாடுவதாக உணவு பாதுகாப்பு குழுவின் தலைவர் கலாநிதி சுரேன் படகொட தெரிவித்துள்ளார்.

மேலும், 75,000 குடும்பங்கள் தினசரி என்ன சாப்பிடுவது என்று தெரியாமல், உணவு நிச்சயமற்ற நிலையில் இருப்பதாகவும், 40,000 பேர் “சேலைன் ” மூலம் போஷாக்கை பெறுவதாகவும் அவர் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடிக்கு உரிய தீர்வுகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால் இந்த நிலைமை மிகவும் மோசமானதாக அமையும் எனவும் படகொட மேலும் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை பகுதியில்

## சகோதரிகள் இருவர் ரயிலில் மோதி விபத்து



ஒருவர் பலி; மற்றையவர் படுகாயம்

வெள்ளவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரு சகோதரிகள் ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த இரண்டு யுவதிகளும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒரு யுவதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 20 வயது யுவதி உடபுசல்லாவ, கிரேசியன் பிரதேசத்தில் வசிப்பவர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கொழும்பு 06

## ஆர்ப்பாட்டக்காரர்களுடன் உரையாடினார் ஜனாதிபதியின் ஊடக பணிப்பாளர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பணிப்பாளர் தனுஷ்க ராமநாயக்க நேற்று காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி செயலகத்திற்கு செல்லும் வழியில் 06

## பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் நேர்மைக்கு பலரும் பாராட்டு



பண்டாரவளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த , பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தான் கண்டெடுத்த கையடக்க தொலைபேசிகள், ரொக்கப்பணம், வங்கி அட்டைகள் என்பவற்றை உரியவரிடம் ஒப்படைத்து பெரும் பாராட்டை பெற்றுள்ளார்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவில் பணி புரியும் 06

## நோர்வூட்டில் மாணவர்களுக்கு பைசர்' ஏற்றும் பணி முன்னெடுப்பு



மாணவர்களுக்கு பைசர்' தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று (29) நோர்வூட் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

நோர்வூட் பிரதேசத்தில் முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட 13 – 17 வயது பிரிவு மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி 06

பெற்றோல் வரிசையிலிருந்த

## மோட்டார் சைக்கிள்கள் மீது காட்டு யானை தாக்கி சேதம்



மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் பெற்றோல் பெறுவதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை (28) வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை இரவு நேரத்தில் காட்டுயானை தாக்கியதில் பல மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளன. 06

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 30
சனிக்கிழமை

கிளிநொச்சி மாவட்ட

# சிறுபோக செய்கைக்கு 222.65 மெ. தொன் யூரியாவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக செய்கைக்கு தேவையான 222.65 மெற்றிக் தொன் யூரியா உரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆணையாளர் நாயகத்திடம் மாவட்ட அரச அதிபரால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மேற்படி யூரியா உரத்தினை விரைவாக வழங்கி வைக்குமாறு ஆணையாளர் நாயகத்தினால் தேசிய உரக்கூட்டுத்தபானத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தினை உடனடியாக வழங்குமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் தேசிய உரக்கூட்டுத்தாபனத்திற்கு கடந்த 22ஆம் திகதி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு தேவையான 222.65 மெற்றிக் தொன் யூரியா உரத்தினை பெற்றுத்தருமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடம் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனினால் விடுக்கப்பட்ட வேண்டுக்கோளுக்கு அமைவாக உரத்தினை அனுப்பி வைக்குமாறு இலங்கை உரகூட்டுத் தாபனத்திற்கு ஆணையாளர் நாயகத்தினால் கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உரக்கூட்டுத்தாபனத்தினூடாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான 222. 65 மெற்றிக் தொன் உரத்தினை கமநல சேவை நிலையங்களினூடாக விநியோகிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு தேவையான உரத்திணை விரைவாக பெற்றுக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்த மாவட்ட அரச அதிபர் மற்றும் கமநல சேவை திணைக்களத்தின் ஆணையாளர் ஆகியோருக்கு விவசாயிகள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

# எரிபொருள் வழங்குமாறு கோரி போராட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களால் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்ட பேரணியும், பணிபகிஷ்கரிப்பும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையில் நேற்று (28) காலை ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணி மன்னார் வீதி சந்தியை அடைந்து அங்கிருந்து வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக முடிவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது,

உரிய நேரத்தில் எரிபொருள் கிடைக்காமையினால் எமது ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்தியாவசிய சேவையாக இருந்தும் எமக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு இதுவரையில் தகுந்த முறைமை உருவாக்கப்படவில்லை.

சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து மட்டத்தினரும் வரிசைகளில் காத்திருப்பதால் வைத்தியசாலைகளின் சேவைகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அரச அதிபருடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்தும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை. வடக்கில் எமது மாவட்டத்தில் மாத்திரமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எமக்கான ஒரு தீர்வு கிடைக்க தொடர் தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தள்ளப்படுவோம் என்றனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வவுனியா மாவட்ட செயலக வளாகத்துக்கு முன்பாக நின்று கோஷங்களை எழுப்பினர்.

இதனையடுத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் அரச அதிபருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலை அடுத்து போராட்டம் முடிவிற்கு வந்தது. பணிபகிஷ்கரிப்பு காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

# அதிபர், ஆசிரியர்கள் எரிபொருள் பெற புதிய பொறிமுறை அவசியம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்.விசேட நிருபர்

மாவட்ட செயலாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை வகுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அது தொடர்பில் சங்கத்தால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீண்டகாலமாக பாடசாலைகள் பூட்டப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே. கொரோனா நோய் ஒருபுறம் பொருளாதார, போக்குவரத்து நெருக்கடி இன்னொரு புறம் எரிபொருள் தட்டுப்பாடு பூதாகாரம். இவை எல்லாமே இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைக் குழந்தைகளையும் வெகுவாகப் பாதித்துள்ளன.

இத்தகைய நிலமைகளைச் சீர் செய்ய முடியாமல் இல்லை. பல வழிமுறைகள் இருந்தும் அவற்றை நாம் தட்டிக்கழித்தே வருகின்றோம்.

இப்போதுள்ள மிக முக்கியமான பிரச்சினை எரிபொருள் பிரச்சினை. இதனால் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துமே செயலிழந்த நிலையில் உள்ளன.

விசேடமாக ஆசிரியர்களின் போக்குவரத்து மார்க்கங்கள் முற்றாக ஸ்தம்பித்துள்ளன. மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

இந்த வழிமுறையை மத்திய கல்வி அமைச்சிடம் நாம் முன்வைத்து அதனை நடைமுறைப் படுத்துவதாக கல்வி அமைச்சர் உறுதிப்படுத்திய தன் அடிப்படையில் இன்று அந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இதே போன்று ஆசிரியர்களின் போக்கு வரத்திற்கும் வழியைக் கண்டறிய வேண்டும். இன்று சகல மாகாணங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாவட்டச் செயலாளர்களின் கண்காணிப்பில் உள்ளன.

ஆகையால் மாவட்டச் செயலாளர்கள் உங்களின் மாவட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை வகுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்மாதிரியாக அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்தியுள்ளமை பாராட்டுக்குரியது.

ஆகையால் சகல மாவட்ட அரசாங்க அதிபர்களும் தயவு செய்து மாணவர்களின் நலன் கருதி இந்த ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

# மீண்டும் கொவிட் 19 தொற்று தலைதூக்கும் அபாயம்

## புதிதாக தொற்றாளர்கள் அடையாளம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொரோனா தொற்று தொடர்பில் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தென்மராட்சியின் சில கிராமங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் சுகாதாரப் பகுதியினர் தென்மராட்சி மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் கருத்துத் தெரிவிக்கையில்;

நீண்ட காலத்திற்குப் பின்னர் கைதடி, அல்லாரை, கொடிகாமம் கச்சாய் வீதி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களில் புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே பொதுமக்கள் இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களை முன் கூட்டியே உணர்ந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். பொது இடங்களில் மீண்டும் முகக்கவசத்தை அணிந்து சகலரையும் பாதுகாக்க வேண்டுமென மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

# முன்பள்ளி சிறார்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம்



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட ஆறு முன்பள்ளி சிறார்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வைகயில் நேற்றைய தினம் புதிதாக கல்மடுநகர் ரங்கன் முன்பள்ளி சிறார்களுக்கும் பசுப்பால் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமத்துவக் சட்சியின் செயற்றிட்டங்களில் ஒன்றாக மேற்கொள்ளப்பட்டு வரும் தூயப்பசுப்பால் வழங்கும் திட்டத்திற்கு அக்கட்சியின் தர்மபுரம் பிரதேச அமைப்பாளர் நா. சந்திரகுமார் நிதியுதவியினை மேற்கொண்டு வருகின்றார். அந்தவகையில் அவரின் நிதியுதவியின் கீழ் தர்மபுரம் கிராமத்தில் புதிய உதயம் முன்பள்ளி, வளர்மதி முன்பள்ளி, இராசநாயகம் முன்பள்ளி, மயில்வாகனம்புரம் மயூரன் முன் பள்ளி, பெரியகுளம் விக்னேஸ்வரா முன்பள்ளி, கல்மடு ரங்கன் முன்பள்ளி ஆகிய ஆறு முன்பள்ளிகளில் நூற்றுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு நாளாந்தம் பசுப்பால் வழங்கப்பட்டு வருகிறது.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வின் அறிமுக வைபவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. பல்கலைக்கழக வளாகத்தினுள் அமந்துள்ள ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளையடுத்து, கைலாசபதி கலையரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. படம்: யாழ் விசேட நிருபர்


# கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி (Master of Christian Studies) முதலாம் அணி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு கடந்த புதன்கிழமை, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் பட்டப்படிப்புகள் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மறை மாவட்டப் பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பி. ஞானப்பிரகாசம், மன்னார் மறை மாவட்டப் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி எஃப். எல். இம்மானுவல் பெர்னாண்டோ, திருகோணமலை மறை மாவட்டப் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் மற்றும் தென்னிந்திய‌த் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

# தொண்டைமானாறு கடலில் இறந்த நிலையில் கரையொதுங்கும் மீன்கள்



பருத்தித்துறை விசேட நிருபர்

தொண்டைமானாறு கடல் நீர் ஏரியில் இறந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகளவிலான மீன்கள் கரையொதுங்கியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருவது குறித்த கடல் நீர் ஏரியில் அதிகளவிலான மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதை அப்பகுதியில் மீன் பிடிக்க சென்றவர்கள் அவதானித்துள்ளனர். இவ்வாறு மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியதற்கான காரணம் தெரியவராத நிலையில் கடல் நீர் ஏரியின் நீர் மட்டம் குறைந்து உப்பின் செறிவு அதிகரித்ததன் விளைவாக இவ்வாறு மீன்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.





மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 400 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 2500 ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. படம்: மன்னார் குறூப் நிருபர்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2022 ஜுலை 30 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

30 முதல் 31 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.43 |
| ளுஹர் | 12.18 |
| அஸர் | 03.40 |
| மஃரிப் | 06.31 |
| இஷா | 07.44 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 14

ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: மரணஅமிர்த யோகம்

திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | முயற்சி |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | கோபம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

### பாரிய போஷாக்கு பற்றாக்குறை ஏற்படுமென எச்சரிக்கை

# பால், முட்டை உற்பத்தியில் வீழ்ச்சி கோழி இறைச்சிக்கும் தட்டுப்பாடு

நாட்டில் தற்போது பால் உற்பத்தி 19.8 சதவீதமும், கோழி உற்பத்தி 12.1 சதவீதமும்.கோழி முட்டை உற்பத்தி 34.9 சதவீதமும் குறைவடைந்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, அடுத்த வருடம் இலங்கை பாரிய போஷாக்கு பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.இதனால் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படவேண்டும் அந்த குழு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இந்த நிலை நீடித்தால் அடுத்த ஆண்டு கோழி மற்றும் முட்டை உற்பத்தி துறைகள் முற்றாக வீழ்ச்சியடையும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த எச்சரிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் உறுதிப்பாடு குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.



# ஜனாதிபதியுடன் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் (Sarah Hulton) இடையிலான சந்திப்பொன்று (28) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த திருமதி ஹல்டனுடன், பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமைகளுக்கு இணங்க செயற்படுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதே தமது விருப்பமென்று ஜனாதிபதி விக்கிரமசிங்க குறிப்பிட்டதுடன் அதற்கு பூரண ஆதரவை வழங்குவதாக உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.


# வேகமாக பரவத் தொடங்கியுள்ள ஒமிக்ரோன் துணை மாறுபாடு



### மூலக்கூறு உயிரியல் துறைத் தலைவர் Dr.சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

ஒமிக்ரோன் தொற்றின் துணை மாறுபாடு பிஏ.5 தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர எச்சரிக்கையை விடுத்துள்ளார்

தற்போது தொற்றுநோயின் மிகப்பெரிய கொரோனா அலைகளில் ஒன்று உலகத்தை பாதித்து வருவதாகச் சுட்டிக்காட்டிய ஜீவந்தர, இது, நோயெதிர்ப்பு தவிர்க்கும் கொரோனா வைரஸ் விகாரங்களில் ஒன்றாகும் என்று கூறியுள்ளார்.



தற்போதைய பிஏ.5 தொற்றால் மருத்துவமனையில் சேர்க்கப்படுவோரின்

06

# எரிபொருள் நிறைவடைந்த பின்னரும் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம்

### எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் அறிவுறுத்தல்!

வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்திற்கமைய, எரிபொருள் விநியோகம் நிறைவடைந்த பின்னர் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் உப தலைவர் குசும் சந்தநாயக்க இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் QR குறியீட்டு முறைமைக்கு அமைய மாத்திரம், எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்திற்கமைய எரிபொருள் விநியோகம் இடம்பெறும் வேளை எரிபொருள் தீர்ந்த பின்னரும் மக்கள் வாகனங்களுடன் வரிசைகளில் நிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### காய்ச்சல், உடல்வலி

# அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்திய ஆலோசனை பெறவும்

### விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா அறிவுறுத்தல்

இந்த நாட்களில் காய்ச்சல், உடல் வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, சிறுவர்களுக்கு காய்ச்சல், இருமல், தடுமல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா இந்த அறிவுறுத்தலினை வழங்கியுள்ளார்.



நாட்டில் தற்போது மீண்டும் அதிகரித்துள்ள கொரோனா, டெங்கு தொற்று அல்லது வேறு வைரஸ் காய்ச்சலால் இந்த நிலை ஏற்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை கடந்த சில தினங்களுடன் ஒப்பிடுகையில் சற்று அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரேண்ட் தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 108 அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், W.D.I.தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 97 தசம் 50 அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது.




### போராட்டத்தின் போது பொலிஸாரின்

# கண்ணீர்ப்புகை குண்டுகளுடன் திருடிய சந்தேகநபர் கைது

போராட்டத்தின் போது கண்ணீர் புகை குண்டுகளை திருடிய சந்தேக நபர் ஒருவர் கண்ணீர் புகை குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை வெலிக்கடை பொல்துவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் பொது ஒழுங்கு முகாமைத்துவ

06



# சகல ஆர்ப்பாட்டங்களிலிருந்தும் லிபரல் சகோதரத்துவ அமைப்பு விலகல்

## அமைப்பின் தலைவர் ஹேமால் நேற்று தெரிவிப்பு

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட ஏனைய ஆர்ப்பாட்டங்களிலிருந்து லிபரல் சகோதரத்துவ அமைப்பு விலகுவதாக நேற்று அறிவித்துள்ளது.

நாட்டில் சமூக பொருளாதார அரசியல் மறுசீரமைப்பு செயல்படுத்தப்பட்டதன் பின்னரே தமது போராட்டம் நிறைவு பெறமென குறிப்பிட்டுள்ள அந்த அமைப்பு, இதனை பாரிய அரசியல் பொருளாதார சமூக கலந்துரையாடல் மூலமே செய்ய முடியுமே தவிர வீதியில் இறங்கி போராட்டம் செய்வதால் அல்ல என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

லிப்ரல் சகோதரத்துவம் சார்பில் அதன் தலைவர் ஹேமால் தஸநாயக்க விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கயில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து ராஜபக்ஷக்களுக்கும் எதிராக மார்ச் மாத ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட போராட்டம் மிகவும் குறுகிய காலத்துக்குள் நாடு முழுவதும் பரவியது. அதற்கு முன்னரே சமூக ஊடகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட இந்த அலைக்கு ஆரம்ப அடித்தளம் இட்ட எமது அமைப்பு காலி முகத்திடல் போராட்டத்துக்கு ஆரம்பத்திலிருந்தே பங்களிப்பை வழங்கி வந்தது.

காலிமுகத் திடலில் நாம் மேற்கொண்ட போராட்டம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதன் மூலம் நிறைவேறியது. எவ்வாறாயினும் இந்த அனைத்து போராட்டங்களும் சகோதரத்துவ அமைப்பாகிய நாம் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்கள் பலரின் பங்களிப்புடன் உருவான ' காலிமுகத் திடலுக்கு அப்பால்' யோசனைத் திட்டத்தில் அடங்கிய சமூக பொருளாதார அரசியல் மறுசீரமைப்பு செயல்படுத்தப் பட்டதன் பின்னாலேயே நிறைவு பெறும்.

இதனை பாரிய அரசியல் பொருளாதார சமூக கலந்துரையாடலை குறிப்பிட்ட தரப்பாரோடு நடத்துவதன் மூலமே தவிர வீதியில் இறங்கி போராட்டம் செய்வதால் அல்ல என்பதை நாம் நம்புகிறோம். அதற்காக எமது அமைப்பானது தன்னால் முடிந்த பங்களிப்பை வழங்குவதற்கு தயாரென இதன் மூலம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் தற்போது காலிமுகத்திடல் அணியினர் மற்றும் சில நபர்கள் தங்களுடைய அரசியல் கொள்கைகளை பிரபலப்படுத்துவதற்காக போராட்ட களத்தை பயன்படுத்துவதன் காரணமாக போராட்டத்தின் பொதுவான நோக்கம் மறைந்து போவதாக தெரிகிறது. அப்படியான விடயங்களை கருத்தில் கொண்டு ஆராய்ந்ததன் பின்னரே எமது அமைப்பு இந்த வெளியேறும் முடிவை எடுத்தது என தெரிவிக்கின்றோம்.

போராட்டக்காரர்கள் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறையை நாம் வன்மையாக எதிர்ப்பதோடு அரசியல் பழிவாங்கலுக்காக தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்த வேண்டாம் என்றும் ஜனநாயக மற்றும் சட்ட கட்டமைப்புக்குள் எல்லாவேளையிலும் நடவடிக்கையில் ஈடுபடுக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என லிப்ரல் சகோதரத்துவம் சார்பில் அதன் தலைவர் ஹேமால் தஸநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 09ஆவது பாராளுமன்ற கூட்டத்தொடருக்கு

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகம் அழைப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ளார்.



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் ஜனாதிபதியினால் 2022 ஒகஸ்ட் 03ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவிருப்பதால் அந்நிகழ்வில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பிப்பது தொடர்பான ஆவணங்களை பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.parlaiment.lk) பதிவேற்றம் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 248.18 | 259.87 |
| கனடியன் டொலர் | 276.66 | 289.79 |
| யூரோ | 362.52 | 377.24 |
| ஜப்பான் யென் | 2.6502 | 2.7620 |
| சிங்கப்பூர் டொலர் | 257.44 | 268.42 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 372.24 | 389.23 |
| அமெரிக்க டொலர் | 357.16 | 368.41 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 956.99 | கட்டார் ரியால் | 98.02 |
| குவைத் டினார் | 1,174.86 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 937.13 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.22 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 30

**குறள் தரும் சிந்தனை**

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்

*ஏற்ற இடமறிந்து தொடர்ந்து தாக்கினால் பகைவர்கள், வெற்றி என்பதை நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள்.*

# மலையக அரசியல் சக்திகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

இந்திய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணும் வகையில் ஜவஹர்லால் நேருவின் ஆலோசனைப்படி அமைக்கப்பட்டதே இலங்கை_ இந்திய காங்கிரஸ். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் முன்னணி வகித்ததால் அக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பல இயக்கங்கள் தமது பெயருடன் 'காங்கிரஸ்' என்பதையும் சேர்த்துக் கொள்வது வழக்கம். இலங்கை_ இந்திய காங்கிரஸ் 1939 ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி தொடக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு இதன் பெயர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் பெற்றது. அப்போது இலங்கையிலேயே அதிக பலம் பொருந்திய தொழிலாளர் இயக்கமாக இ.தொ.கா விளங்கியது.

இ.தொ.கா. இன்று 83 ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளது. அதன் மிகப் பெரிய வெற்றியாக 1948 ஆம் ஆண்டு இழந்த குடியுரிமை மற்றும் வாக்குரிமையை பறித்த அதே ஐ.தே.க. வைப் பயன்படுத்தியே மீண்டும் அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தமையை குறிப்பிட்டுச் சொல்லலாம். இலங்கை_ இந்திய காங்கிரஸ் 1947 பொதுத் தேர்தலில் ஏழு பாராளுமன்ற ஆசனங்களை வென்று பாராளுமன்றத்தில் இடம்பிடித்ததோடு இடதுசாரி கட்சிகளோடு தோழமை பாராட்டவும் செய்தது. அன்றைய பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க இதை விரும்பவில்லை. சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேண்டிய இடங்களில் தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதை அவர் தீவிரமாக எடுத்துக் கொண்டார்.

இ.தொ.கா. தொடர்ச்சியாக இந்த இனப்பாகுபாட்டின் வீச்சைத் சந்தித்து வந்துள்ளது. அதன் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐ.தே.க. ஆட்சிக் காலங்களில் நியமன பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து தமது மக்களின் நலன்களுக்காக போராடி வந்திருக்கிறார். இன்றுள்ள பெரும்பாலான மலையக தொழிற்சங்க அரசியல் கட்சிகள் ஒரு சமயத்தில் இ.தொ.காவுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு கொண்டிருந்தவையே.

இ.தொ.கா ஆரம்ப காலத்தில் பிரித்தானியருக்குச் சொந்தமான பெருந்தோட்ட நிர்வாகங்களுடன் மோத வேண்டியிருந்தது. சுதந்திரத்தின் பின்னர் இனவாத அரசியலுடன் போராடி உரிமைகளைப் பெற வேண்டியிருந்தது. 1977 இன் பின்னர் இ.தொ.காவினால் ஜே.ஆரின் அமைச்சரவையில் இடம்பிடிக்க முடிந்தது. ஒவ்வொன்றும் வெவ்வேறான காலங்கள், வெவ்வேறான பிரச்சினைகள். சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவின் பின்னர் அவரது பேரன் ஆறுமுகன் தொண்டமான் இ.தொ.காவை வழிநடத்தினார். இ.தொ.காவையும் மலையக அரசியலையும் தன் கட்டுப்பாட்டில் அவரால் வைத்திருக்க முடிந்திருந்தது. தற்போது ஜீவன் தொண்டமானின் காலம். எனினும் சௌமியமூர்த்தி தொண்டமானின் பின்னர் இ.தொ.கா. படிப்படியான சரிவை சந்தித்து வந்திருப்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். ஒரு நீண்ட பயணத்தில் மேடுபள்ளங்களை சந்திக்க நேர்வது வழமையே என்றாலும், இன்றைய அரசியல் சூழலை வழமையான மேடுபள்ளம் என வரையறை செய்து விட முடியாது.

நாடு முன்னெப்பொழுதுமே கண்டிராத ஒரு பொருளாதார நெருக்கடியை இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறது. பெருந்தோட்டங்களில் உணவுப் பஞ்சம் அல்லது உணவுகளை பெரிய விலை கொடுத்து வாங்க முடியாத நிலை ஏற்படலாம். பெருந்தோட்ட சமூகம் சுயதேவைக்காக உணவு உற்பத்தியில் ஈடுபடுதல், வழமையான உணவு பழக்கத்தை மாற்றிக் கொள்ளல் மற்றும் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டிருக்கும் தோட்டக் காணிகளை தொழிலாளர் குடும்பத்தவருக்கு பகிர்ந்தளித்தல் என்பன இன்று செய்து முடிக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக விளங்குகின்றன.

இவை கையாள கடினமாக விடயங்கள். எனவே தனியாளாக எந்தவொரு மலையகக் கட்சியாலும் பரந்த அளவில் இவற்றை செய்து முடிப்பது சாத்தியம் அல்ல என்பதால் இ.தொ.கா. ஏனைய மலையகக் கட்சிகளோடு, குறிப்பாக தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் பேச வேண்டும். முக்கியமானதும் அடிப்படையுமான விடயங்களில் மலையகக் கட்சிகள் ஒன்றுபட்டதில்லை என்பது உண்மையானாலும் இந்த நெருக்கடியான காலக்கட்டத்தை கடந்து செல்வதற்காக அக்கட்சிகள் இணைந்த செயல்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இ.தொ.கா. தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. காணி விவகாரம் ஒன்றில் சிக்கிக் கொண்ட பிரதேச அரசியல்வாதி ஒருவர் மீது இ.தொ.கா. தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது பாராட்டுக்குரியது. பத்தனை காட்டு மாரியம்மன் கடைத் தொகுதி விவகாரத்திலும் மௌனம் சாதிக்காமல் இ.தொ.கா. தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

இச்சூழலில், மலையகம் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளை முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து எதிர்கொள்வதே காலத்துக்கு பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்பதோடு, அடுத்த 15 ஆண்டுகளை கடந்து நூற்றாண்டை எட்டுவதற்கான சக்தியையும் பலத்தையும் கொடுக்கும். பொதுவான விவகாரங்களில் மக்களின் நன்மைக்காக இணைந்து செயல்படுவது ஒன்றும் கெட்ட விஷயமல்ல.

editor.tkn@lakehouse.lk

# முகநூல் போதைக்குள் சிக்குண்ட இன்றைய இளைஞர் சமுதாயம்!

## வாசிப்புப் பழக்கம், அறிவுத் தேடல் மழுங்கிப் போன நிலையில், தீயவற்றை மாத்திரமே தேடியலைகின்றனர் தற்கால இளவயதினர் பலர்!



தற்போதைய இளைய சமுதாயம் சமூக வலைத்தளங்கள், இணையம் என்னும் மாயவலைக்குள் சிக்கி மூழ்கிக் கொண்டிருக்கிறது. இணையம் என்பது பரந்து விரிந்த விஷயமாக இருந்தாலும், அதன் ஒரு புள்ளிக்குள்ளேயே இளைய சமுதாயம் சுற்றிச் சுற்றி வருவதால், அதன் சிறகுகள் பறப்பதற்கு பதிலாக முடமாக்கப்பட்டுள்ளன.

இணையத்தில் தெரிந்து கொள்ள இயலாத விஷயங்களே இருக்க முடியாது, பார்க்க முடியாத விஷயங்களே இல்லை. எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இணையம் வாயிலாக படிப்புகளை வழங்கி வருகின்றன. நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த நபரை, இணையத்தின் வாயிலாக நாம் இருக்கும் இடத்தில் இருந்து பார்க்க முடியும், பேச முடியும்.

எங்கோ ஒரு தலைவர் பேசுவதை இணையத்தின் மூலமாக உடனுக்குடன் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது என இணையத்தைப் பற்றிய நல்ல விஷயங்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஆனால், இந்த நல்ல விஷயங்களில் ஒன்றையாவது நமது இளைய சமுதாயம் பயன்படுத்திக் கொள்கிறதா? திறன்பேசியில் சிக்கிச் சீரழிந்த நமது இளைஞர்கள், தற்போது, திறன்பேசியில் இணைய சேவையைப் பெற்று மேலும் வேகமாக அழிவுப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இணையமும், தொலைத்தொடர்பும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பயன்படும் என்ற எண்ணம் தற்போது மறுக்கப்பட்டு, இளைய சமுதாயத்தின் சீரழிவுக்கே இதுதான் காரணமாக உருமாறி விட்டது.



படிப்புக்காகவும், செய்திகளை அறிந்து கொள்ளவும், செய்திகளை பரிமாறிக் கொள்ளவும் எத்தனை இளைஞர்கள் கணினியையோ, திறன்பேசியையோ பயன்படுத்துகிறார்கள்? அவர்கள் மிகச் சிலரே. முகநூல் பக்கத்தில் அல்லவா தங்களது வாழ்நாளை எவ்வித குற்ற உணர்ச்சியும் இன்றி கரைத்துக் கொண்டிருக்கிறார்கள்

சமீபத்தில் நடந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், பொறியியல் மற்றும் தகவல் தொலைத்தொடர்பு படிப்புகளில் படித்துக் கொண்டிருக்கும், படித்து முடித்து வேலை செய்யும் இளைஞர்களிடம் சமுதாயத்தைப் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன. தற்போது சமுதாயம் சந்திக்கும் அவலங்கள் பற்றி அவர்களுக்குத் தெரிந்த விஷயம் பூச்சியமாகத்தான் இருந்தது.

இது ஒரு சாதாரண விஷயமாக எடுத்துக் கொண்டால் சாதாரணம் தான். ஆனால், நமது இளைய சமுதாயத்தின் பொதுஅறிவுக்கு இவர்கள் ஒரு உதாரணம் என்று எடுத்துக் கொண்டால் அது சமுதாயத்தின் அசாதாரண விஷயம் என்பது தெரிய வரும்.

சமுதாயத்தில் தற்போதிருக்கும் ஒரு அவல நிலை குறித்துக் கூட இளைஞர்கள் தகவல்களை தெரிந்து வைத்துக் கொள்வதில்லை. செய்தித்தாள் படிக்கும் பழக்கம் மாணவர்களிடையே குறைந்து வருகிறது. இதற்கு உடனடி காரணத்தையும் பலர் வைத்திருக்கிறார்கள். அதாவது, அதிகப்படியான கல்விச் சுமையை காரணம் கூறுகிறார்கள். கல்விச் சுமை காரணமாக செய்தித்தாள் படிக்க முடியாமல் போகும் அதே இளைய சமுதாயம், திறன்பேசியில் பேசவோ, முகநூலில் பதிவு செய்யவோ தவறுவதில்லை.

நூறில் 25 சதவீதத்தினர் செய்தித்தாள் படித்தால், ஏனையோர் முகநூல் தொடர்பில் இருக்கிறார்கள். முகநூல் பக்கங்களிலும் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவற்றை எல்லாம் யார் பார்ப்பது? நமக்குத் தேவையானது, நமது நண்பர்களைப் பற்றி கிண்டல் செய்வதும், நமது அழகான புகைப்படங்களை அப்டேட் செய்து அதற்கு பல நூறு விருப்புகளை பெறுவதுமே.

இதெல்லாம் இளைய சமுதாயத்தின் பொழுதுபோக்கு அம்சங்களாக இருப்பதில் தவறில்லை. ஆனால் இது ஒரு போதையாக மாறிவிடக் கூடாது. இதனால் எதிர்காலமே சூன்யமாகிவிடக் கூடாது என்பதுதான் தற்போதைய கவலை.

இணையத்தின் மூலம் எதிர்காலத்தை நல்ல முறையில் உருவாக்கிக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒரு செய்தியையாவது படிப்பதையும், ஒரு தலைவரின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொள்வதையும், படிப்பு மற்றும் பணி நிமித்தமான விஷயங்களை படித்து உங்களை அதற்கேற்ற வகையில் உருவாக்கிக் கொள்வதையும் வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் படித்த விஷயங்களை உங்கள் நண்பர்களுடன் பேஸ்புக்கில் பகிர்ந்து உங்களை அறிவுஜீவியாக மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வழியைப் பின்பற்றி உங்கள் நண்பர்களும் வருவார்கள்.

பொதுஅறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல வெறும் கல்லூரி படிப்பு மட்டுமே வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய போதுமானதாகாது என்பதை நினைவில் கொண்டு இணையத்தை முன்னேற்றப் பாதையில் பயன்படுத்துவோம்.

கோவிலூர் **செல்வராஜன்...**

# குரங்கு அம்மை தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு?

குரங்கு அம்மை என்பது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய். ஆபிரிக்காவில் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டிருந்த ஆய்வக குரங்கிலிருந்து முதன்முதலில் இந்த வைரஸ் எடுக்கப்பட்டதால் இது 'குரங்கு அம்மை' என அழைக்கப்படுகிறது. குரங்கு மற்றும் பெரியம்மை வைரஸ்கள் மரபணு ரீதியாக ஒரே மாதிரியானவை.

இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில் இந்த வைரஸ் தற்போது தீவிர பரவல் நிலையை அடைந்து விட்டது. அதாவது ஒரு வைரஸ் அல்லது நோய் ஒரு குழுவிற்கு இடையே பலருக்கு பரவி, பலருக்கு அதன் எதிர்ப்பு சக்தி வந்து, பின்னர் காலத்துக்குக் காலம் ஏற்படும் காய்ச்சல் போல மாறி வருகின்றது. இந்தியாவின் கேரளாவில் சிலருக்கு குரங்கு அம்மை ஏற்பட்டுள்ளது.

குரங்கு அம்மை யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். குரங்கு அம்மை பாதிக்கப்பட்ட ஒரு நபரிடம் இருந்து இன்னொரு நபருக்கு நெருங்கிய உடல் தொடர்பு மூலம் பரவுகிறது. குரங்கு அம்மை ஏற்பட்டவருக்கு உள்ள சொறி, சிரங்குகள் இன்னொருவருக்கும் பரவும் வாய்ப்பு உள்ளது. அதேபோல் குரங்கு அம்மை இருக்கும் விலங்குகளுடன் நெருக்கமாக பழகும் நபர்களுக்கு இந்த நோய் பரவ வாய்ப்பு உள்ளது. பொதுவாக குரங்கு அம்மை காரணமாக ஏற்படும் சிரங்குகளில் இருந்து இந்நோய் பரவும். பாலியல் உறவு வழியாக பரவும் அபாயமும் உள்ளது.

## பாதிப்பை கூடுதலாக எதிர்கொள்வோர் யார்?





குரங்கு அம்மையினால் பொதுவாக ஆண்கள் மற்றும் அடிப்படை நோயெதிர்ப்பு குறைபாடு உள்ளவர்கள் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. குறிப்பாக 40 முதல் 50 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. முக்கியமாக தன் பாலின உறவு கொண்ட ஆண்கள் இடையே இந்த வைரஸ் அதிகமாக பரவி இருக்கிறது. சுகாதாரப் பணியாளர்கள், பாலியல் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு இந்த பாதிப்பு அதிகம் ஏற்படலாம். கர்ப்பிணிப் பெண்கள், இளம் குழந்தைகள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்களுக்கும் குரங்கு அம்மை ஏற்படும் அபாயம் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

குரங்கு அம்மை அறிகுறிகள் பெரியம்மை அறிகுறிகளைப் போலவே இருக்கும், ஆனால் இலேசானவை. மேலும் இந்த நோய் அவ்வளவு ஆபத்து கொண்டது கிடையாது. இதனால் ஏற்படும் அறிகுறிகள் பொதுவாக 1421 நாட்களுக்குள் நீடிக்கும். குரங்கு அம்மையின் இறப்பு வீதம் பொதுமக்களில் 0 முதல் 11 சதவீதம் வரை உள்ளது. ஆனால் சிறு குழந்தைகளிடையே அதிகமாக உள்ளது.

பொதுவான அறிகுறிகளில் காய்ச்சல், கடுமையான தலைவலி, வீக்கம் (கழுத்து, அக்குள் அல்லது இடுப்பு), முதுகுவலி, தசைவலி மற்றும் சோர்வு ஆகியவை அடங்கும். நோயாளிகளிடம் ஒரு வித அரிப்பு தன்மை உண்டாகும். பெரும்பாலும் முகத்தில் தடிப்புகள் தோன்றும், பின்னர் உடலின் மற்ற பகுதிகளுக்கும் இந்த தடிப்புகள் பரவும். தடிப்புகள் நுளம்பு கடித்தது போன்ற சிவப்பு புள்ளிகளாகத் தொடங்கும். படிப்படியாக சீழ் நிறைந்த, பெரிய புடைப்புகளாக மாறி, பின்னர் சிரங்குகளாக மாறும்.

முக்கியமாக கைகள், பாதங்கள், தொடை பகுதிகளில் தடிப்புகள் ஏற்படும். இது சீழ் வைத்து பின்னர் சீழ் வெடித்து காய்ந்த புண்களாக மாறும். குரங்கு அம்மை ஏற்படுவதை தடுக்க முக்கியமான சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். நோய் அறிகுறி உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதைத் தவிர்த்தல், பாதுகாப்பான உடலுறவு, உணவுப் பொருட்களை பகிராமல் இருப்பது, அவர்கள் பயன்படுத்தும் பொருட்களை பயன்படுத்தாமல் இருத்தல், கைகளை அடிக்கடி கழுவுதல், முக்கியமாக அறிகுறி உள்ளவர்களை சந்தித்த பின் உங்களை சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

# இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட அதிநவீன டிஜிட்டல் மொபைல் ரேடியோ கட்டமைப்பு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் களத் தொடர்பாடல் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான 10 வருட ஒப்பந்தத்தை Hytera, அதன் இலங்கைக் கூட்டாளரான Securatec உடன் இணைந்து வெற்றிகரமாக வென்றுள்ளது. Securatec ஏற்கனவே இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு Hytera வின் அதிநவீன MD788 மொபைல் ரேடியோ சாதனங்கள் மற்றும் ஆன்டெனாக்கள் 150 ஐ வழங்கியுள்ளது.

இது பல்துறை டிஜிட்டல் செயல்பாடுகளை வழங்குவதுடன், எந்த சூழ்நிலையிலும் தகவல் பரிமாற்றம், செயல்பாடுகள் மற்றும் சம்பவபதில் நடவடிக்கை நேரங்களை மேம்படுத்துகிறது. இந்த சாதனங்களை திறம்பட பயன்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. பணிச்சூழலியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட புதிய ரேடியோ சாதனங்கள் நீடித்து உழைக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், அவை பணி மேசையிலும் வெளிப் புலத்திலும் எளிதாக செயல்படவல்லவை.

இந்த செயல்திட்டம் தொடர்பில் Hytera Sri Lanka வின் பொது முகாமையாளரான கெவின் கருத்து வெளியிடுகையில், "பொலிஸ் படையின் களத் தொடர்பாடல் வலையமைப்பை மேம்படுத்துவதற்காக, இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இந்த கூட்டுறவை ஏற்படுத்த முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எமது விரிவான சட்ட அமுலாக்கப் பிரிவு மற்றும் பிற வாடிக்கையாளர்கள் பட்டியலில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ப்பது Hytera வில் எமக்கு மதிப்புக்குரிய ஒரு ஆதாரமாகும். எதிர்காலத்தில் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.



Securatec வழங்கிய புதிய Hytera டிஜிட்டல் ரேடியோக்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ வாகனங்களில் பயன்படுத்தவும், தகவல் அனுப்பியவர்களுடனும், வெளிப்புலத்தில் உள்ள அலுவலர்களுடனும் மிகவும் திறம்பட அவர்கள் தொடர்புகொள்வதற்கும் உதவுகின்றன. இது நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளுக்கான தொடர்பாடல் உட்கட்டமைப்பை மேம்படுத்துகிறது.

தொழில்ரீதியான மொபைல் ரேடியோ துறையில் ஒரு தொழில்துறை முன்னோடியாக, Hytera உலகில் வேகமாக வளர்ந்து வரும் வானொலி தகவல் தொடர்பாடல் நிறுவனங்களில் ஒன்றாகும். உலகெங்கிலும் 10 சர்வதேச ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் மற்றும் 90 க்கும் மேற்பட்ட பிராந்திய ஸ்தாபனங்களுடன் உலகில் வேகமாக வளர்ந்து வரும் வானொலி தகவல் தொடர்பாடல் நிறுவனமாக Hytera திகழ்ந்து வருவதுடன், சீனா மற்றும் ஸ்பெயினில் மூன்று தொழில்துறை 4.0 உற்பத்தி மையங்களுடன் 5 மில்லியன் அலகுகளை வருடாந்தம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

Securatec குழுமம் என்பது 100% இலங்கைக்குச் சொந்தமான நிறுவனங்கள் குழுமமாகும். இது இராணுவம் மற்றும் சட்ட அமுலாக்கத்துடன் தொடர்புடைய வர்த்தக வணிகத்தில் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது. Securatec, வர்த்தகம், பொறியியல், பாதுகாப்பு, தொலைதொடர்பாடல், ஏற்றுமதி, விவசாயம் மற்றும் பெருந்தோட்டங்கள், அகழ்வு உட்பட பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

# பிளவுகளையும், மனக்கசப்பையும் ஒதுக்கி வைத்து விட்டு சகோதரத்துவத்தையும், புரிந்துணர்வையும் வளர்ப்போம்!

இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறி மதீனாவுக்கு புலம்பெயர்ந்து சென்ற நிகழ்வே ஹிஜ்ரத் எனப்படுகிறது. இந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமியர்களின் ஹிஜ்ரி வருட முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலப்பகுதியில்தான் இறைவன் அன்னாரை இறைத்தூராகத் தெரிவு செய்து இறைத்தூதை அருளினான். அன்னார் அந்த இறைத்தூதை மக்களிடம் கொண்டு சென்றார்கள். மக்காவில் வாழ்ந்த சுமார் 13 வருட காலப்பகுதியிலும் பல விதமான நெருக்குதல்களுக்கும் சவால்களுக்கும் அன்னார் முகம் கொடுத்து வந்தார்கள்.

இவ்வாறான சூழலில்தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறி மதீனாவுக்கு கி.பி. 622 இல் ஹிஜ்ரத் சென்றார்கள். அது இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் பரவுதலுக்கும் அடித்தளமாகவும் திருப்புமுனையாகவும் அமைந்தது. அதன் ஊடாக உலகில் இஸ்லாம் ஆட்சி பிரதேசமும் மதீனாவில் தோற்றம் பெற்றது.

அதனால்தான் இஸ்லாமிய உலகின் இரண்டாவது கலீபாவான உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் நிகழ்வை அடித்தளமாகக் கொண்டு ஹிஜ்ரி வருட முறைமையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்கள்.

ஹிஜ்ரி வருட முறைமை முஹம்மத் நபி (ஸல்) காலத்திலோ அல்லது முதலாவது கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் காலத்திலோ அறிமுகப்படுத்தப்படவில்லை.

அப்ரஹா மன்னர் மக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ்வை இடிக்கும் நோக்கில் முன்னெடுத்த யானைப் படையெடுப்பு அழிக்கப்பட்ட நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு யானை ஆண்டு கணிப்பு முறைமைதான் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் புழக்கத்தில் இருந்து வந்தது.

இவ்வாறான சூழலில் உமர் (ரலி) அவர்கள் ஆட்சியாளராக இருந்த போது இஸ்லாமிய உலகிற்கு வருட கணிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்தார். அதற்கு ஏற்ப நபித் தோழர்களை அழைத்து இஸ்லாமிய வருடக் கணிப்பை எதனை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிப்பது என்பது தொடர்பில் உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது பலரும் பல மாதங்களைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமாக ஹிஜ்ரத் நிகழ்வு அமைந்தது. இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போது இது நினைவுபடுத்தப்படுகிறது.

இவ்வாறு மகத்துவம் மிக்க புதிய வருடத்தில் பிரவேசிக்கின்ற நாம் கடந்த வருடத்தின் எமது ஆன்மீக செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்து புதிய வருடத்திற்கான செயற்பாடுகளுக்கு திட்டமிடல்களை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். அதாவது இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றியுள்ளேன் என எமக்குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவமன்னிப்பு தேடிக் கொள்ளவும் தவறக் கூடாது.




அதேநேரம் ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வோம். இப்புதுவருடத்தில் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக்கசப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தையும், பரஸ்பர புரிந்துணர்வையும் தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரியட்டும்.



கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
*(யாழ்ப்பாணம்)*

# இதழியல் வேந்தர் ஆர்.என். லோகேந்திரலிங்கத்தை பாராட்டி லண்டன்வாழ் தமிழ்ச் சமூகம் நடத்திய விழா

இதழியல் வேந்தர் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு லண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் அண்மையில் விழா எடுத்து கௌரவித்தது. ஊடகத் துறையில் இருபத்தைந்து ஆண்டு கால சாதனை நிகழ்த்தி, பொது வாழ்க்கையில் ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து, கவிதை, பேச்சு,எழுத்து, இலக்கியம், சமூகம், சமயம், எனப் பல்துறைகளிலும் லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டி லண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

லண்டனில் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் மணி மண்டபத்தில் இந்த விழா நடைபெற்றது. விழா தொடங்குமுன்னர் காலை 10.30 மணியளவில் இங்கு வருகை தந்த லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சைவ முன்னேற்றச்சங்கத்தின் ஸ்ரீ சிவகாமி சமேதர ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிவாச்சாரிய பெருமக்களால் சிறப்பான வரவேற்பும் கௌரவமும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் காலை 11.30 மணிக்குத் தொடங்கின. சைவ முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்பொழுது நிர்வாகக்குழுவில் இடம்பெற்றிருப்பவருமான வாமனானந்தன் கடவுள் வாழ்த்து இசைத்தார். திருமதி வசந்தா மகாதேவன் தமிழ்த் தாய் வாழ்த்தினை இசைத்தார். தொடர்ந்து மறைந்த முன்னோர்களுக்கான மௌன வணக்கம் நடைபெற்றது.

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் தரும.இரவீந்திரமோகன் விழாவிற்கு வருகை தந்திருந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் நிறுவனர், தொண்டர் திலகம் வ.இ. இராமநாதன் தலைமையுரை நிகழ்த்தினார்.

அவர் தனது தலைமையுரையில் லோகேந்திரலிங்கத்துடனான தனது நீண்ட கால நட்பை நினைவு கூர்ந்தார். இன்றைய அவரின் வெற்றி ஒரே நாளில் பெறப்பட்டதல்ல என்றும், ஊடகத்துறையில் அவர் மேற்கொண்ட உழைப்பும், விடா முயற்சியும், எதிர்கொண்ட சவால்களுமே அவரது சாதனையை சாத்தியமாகியிருக்கிறது என்றும் அவர் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு சேலம் பன்னிரு திருமுறை பகுப்பாய்வு மையத்தின் தலைவரும், தற்பொழுது இங்கிலாந்தில் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருப்பவருமான பேராசிரியர் வே.சங்கரநாராயணன் தொடக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், லோகேந்திரலிங்கத்தின் ஐம்பது ஆண்டு காலப் பொதுவாழ்வின் சாதனைகளை பட்டியலிட்டார். பகைவர்களை எதிர்கொள்ள வேண்டிய ஊடகத் துறையில் இருந்தும், உலகளாவிய நட்பின் நாயகனாக அவர் உயர்ந்து விளங்கும் பாங்கு, துறை தாண்டியும், தாயக மக்களுக்காக அவர் அன்றாடம் ஆற்றிவரும் சமூகநலப் பணிகளை அவர் பாராட்டினார்.

50 முதல் 70 பக்கங்கள் கொண்ட வார இதழை சுமார் 1250 வாரங்களாக, 25 ஆண்டுகள் நடத்துவது சாமானியமான சாதனை அல்ல என்றும், புலம்பெயர் தேசத்தில் வெள்ளிவிழா காணும் முதல் தமிழ் வார இதழ் கனடா உதயன் பத்திரிகை தான் என்றும் அவர் தன் உரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய டொக்டர் நவரத்தினம், லோகேந்திலிங்கத்தின் சாதனைகள் தமிழ் இனத்துக்கே பெருமை தருவதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

வாழ்த்துரை வழங்கிய இலங்கையின் பிரபல ஊடகவியலாளர் விக்கிரமசிங்க, லோகேந்திரலிங்கத்துடன் தான் கொண்ட நட்பின் நினைவலைகளை பகிர்ந்து கொண்டார். ஒரு ஊடகவியலாளரின் பொறுப்பு, கடமை, பத்திரிகை தருமம் இவைகளை செம்மையாகக் கடைப்பிடித்து சிறப்புப் பெற்றவர் லோகேந்திரலிங்கம் என்று அவர் குறிப்பிட்டார்.







வாமனானந்தன் தனது வாழ்த்துரையில், உலகில் முதல் எழுத்தாளர் விநாயகப் பெருமான் என்று குறிப்பிடுவதைப் போல, முதுகெலும்புள்ள பத்திரிகையாளரான லோகேந்திரலிங்கத்தை தமிழ் விநாயகர் என்று அழைப்பதில் தவறில்லை என்றார்.

டொக்டர் நித்தியானந்தம் தனது வாழ்த்துரையில், லோகேந்திரலிங்கத்தின் தமிழ்ப் பணிகளோடு, சமூகப் பணிகளும் தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகி தேவசகாயம், லோகேந்திரலிங்கம் மலையகப் பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் குறித்து பெருமிதம் கொள்வதாகத் தெரிவித்தார்.

லண்டன் சிவன் கோயில் நிறுவனர் சச்சிதானந்தம் தனது வாழ்த்துரையில், லோகேந்திரலிங்கத்தின் பணிகளைப் பாராட்டி வாழ்த்தினார்.

இந்துசேகரன் தனது வாழ்த்துரையில், யானை பலம் கொண்ட சிந்தனையாளர் லோகேந்திரலிங்கம் எழுத்தாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் ஒரு வழிகாட்டி எனக் குறிப்பிட்டார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமயச் செயலாளர் திருமதி சரோஜினி சந்திரகோபால், திருமதி புவனேஸ்வரி நடராசா, திருமதி ரஷாந்தினி உள்ளிட்டோரும் வாழ்த்துரைகள் வழங்கினர்.

நிறைவாகத் தனது ஏற்புரையில் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், லண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் எடுத்த இந்த நிறைவான நிகழ்வுக்குத் தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இது போன்ற விழாக்கள் தனது பொறுப்பையும், கடமையையும் அதிகரித்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இக்கட்டான சூழ்நிலைகளிலும், இலக்கு நோக்கிய தனது பயணத்தை நிறுத்தியதில்லை என்றும், எதிர்காலத்திலும் இலக்கு நோக்கிய தனது பயணம் தொடரும் என்றும், இது போன்ற வாழ்த்துக்கள் அதற்கு வலுவூட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடா உதயன் இதழின் பிரதிகளையும் லண்டன் வாழ் தமிழ்ச் சமூக உறவுகளுக்கு அவர் வழங்கி மகிழ்ந்தார். லண்டன் தமிழ்ச் சமூகத்தின் இந்த இரண்டரை மணி நேர விழா, இனிய மதிய விருந்துடன் நிறைவடைந்தது.

# தகவல்களை பறைசாற்றும் முரசாக மாறி விட்ட முகநூல்



உலகம் ஒரு சிறு கிராமமாக ஒடுங்கி விட்டது. நாம் உலகத்தைக் கைகளுக்குள் கொண்டு வந்து காட்சிப் பொருளாக்கி விட்டோம். சினிமாக் கொட்டகைகள், வியாபார ஸ்தாபனங்கள், விழாக்கள், ஆலய வழிபாடு இவைபோன்ற எதுவுமே தேவையில்லை. அனைத்தையும் இருந்த இடத்தில் இருந்து கண்டு களிக்கின்றோம்.

காலையில் எழுந்து கமராக் கண்களை விரிக்கின்றோம். முகநூல், புலனம் ஆகிய கட்டடங்கள் அழைக்கின்றன. அவற்றிலே முகநூலைத் திறந்தால் மரணஅறிவித்தல், பிறந்தநாள் விழா, திருமண விழா, புத்தக வெளியீடு, பொருட்களின் விற்பனை, உலகச் செய்திகள், இலக்கிய, கலைநிகழ்வுகள், அரசியல் ஆய்வுகள், உறவினர்களின் சந்திப்பு உரையாடல்கள் என தொடர்ந்து 'றீல்' போல் விழுந்து கொண்டே இருக்கும்.

வாழ்த்துகள், ஆழ்ந்த அனுதாபங்கள் மாறி மாறி தட்டச்சில் கைகள் சுழலுகின்றன. ஒரு தளம் பல விளம்பரங்களுக்குரிய காட்சியகமாக இருக்கின்றது. கதவைத் திறந்து முன்பகுதியில் இருக்கும் பிறந்தநாள் விழா அறை. அதற்குள் பலரும் பயணம் செய்த காட்சியைக் காணலாம். இவ்வாறு ஒவ்வொரு அறையாகப் காட்சியகத்தைப் பார்த்து முடித்து வெளிவர பல மணித்தியாலங்களைக் கடந்து விடுவோம்.

2003 ஆம் ஆண்டு Mark Zuckerberg பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது நண்பர்களுக்காக உருவாக்கிய Facemash.com என்னும் இணையத்தளம் பின்னர் 2004 இல் முகநூலாக உருவெடுத்தது. பல நாடுகள் முகநூலைத் தடை செய்துள்ளன. பல இடங்களில் வேலைநேரங்களில் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் 2022 தை மாதக் கணக்கீட்டின் படி மாதாந்தம் முகநூலைப் பயன்படுத்துபவர்கள் 2.912 பில்லியன் பேர் என்று கணக்கீடு காட்டுகின்றது. நாள்தோறும் பயன்படுத்துபவர்கள் 1.929 பில்லியன் பேர்.




உலக மக்கள்தொகையானது 2050 ஆம் ஆண்டில் 8 முதல் 10.5 பில்லியன் வரையில் உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அப்படியென்றால் இந்த முகநூலுக்குள் புதைந்துள்ளவர்களுடைய தொகை எவ்வாறு உயரும் என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. காலம் கொண்டு வந்து தந்த ஒரு காட்சியகமமே முகநூல் என்பது உண்மை.

முற்காலத்தில் ஒரு விழா என்றால், அறிவித்தல்கள் கடதாசியில் பிரசுரிப்பார்கள். அயலவர்களுக்குக் கொண்டு சென்று கொடுப்பார்கள். இலலையென்றால், பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். சங்ககாலத்திலே ஒரு இடத்தில் விழா நடைபெறப் போகின்றது என்றால், ஒவ்வொரு தெருவாகச் சென்று விழாச் செய்தியினை உரைக்கின்ற வழக்கம் இருந்தது. அரசனுடைய பிறந்தநாள், படையெழுச்சி நாள், மணநாள் போன்ற நிகழ்வுகளை முரசறைந்து அறிவிப்பார்கள். உதாரணமாக அரசனுக்கு பிறந்தநாள் என்றால், அந்தச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் போது முரசறைந்து அறிவிக்கும் வழக்கம் இருந்தது. இதனை

'திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்'

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. ஒவ்வொரு விழாவுக்கும் ஒவ்வொரு வகையான முரசு பயன்படுத்தப்பட்டது. போர்முரசு, கொடைமுரசு, மணமுரசு என தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டன. முரசினை வைப்பதற்கு என்று ஒரு தனிக் கட்டிலும் உருவாக்கப்பட்டு அதன் மீது வைக்கப்பட்டது. இச்செய்தியினை பதிற்றுப் பற்று எடுத்துக் காட்டுகின்றது.

'செங்கள விருப்பொடு கூலம் முற்றிய
உருவச் செந்திணை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து
இயவர்''

விழாச் செய்திகளைச் சொல்வதற்காக மணமுரசு பயன்படுத்தப்பட்ட செய்தியை மணிமேகலை எடுத்துக்காட்டுகின்றது.

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசும்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
ஏற்றுதி போர்த்த இடியுறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்கும் குறுதி வேட்கை
முரசுகடிப் பிகூஉம் முதுகுடிப் பிறந்
தோன்

என்று மணிமேகலை கூறுகிறது. பழைமை உடைய குடியில் பிறந்தவன் வென்ற காளையின் தோலினால் போர்த்தி இடி போன்ற முழக்கத்தைச் செய்கின்ற முரசைக் கச்சையானையின் கழுத்தின் மேலே ஏற்றிக் குறுந்தடியால் அடித்து விழாச் செய்தியை ஊர் மக்களுக்கு அறிவித்தான் என்று திருவிழாச் செய்தியை ஊரவர்க்கு அறிவித்த போது முரசு அறைந்த செய்தியை மணிமேகலை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு முரசு செய்கின்ற மரம், அது செய்கின்ற முறைமைகள், அதற்குக் கிடைக்கின்ற மரியாதை, பல்வேறுவிதமான முரசுகள், அவை பற்றிய விளக்கம் என்பன அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, மணிமேகலை, பெருங்கதை போன்ற பாடல்களில் அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், இந்த முரசு இன்று ஒரு பக்கப்பார்வையில் முகநூலுக்குள் அடங்கி விட்டதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோல் 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலை எடுத்துப் பார்த்தால் அது கட்டப்பட்ட காலப்பகுதியில் வேதம் ஓதுவார் இல்லங்கள், வியாபார ஸ்தாபனங்கள், தேவதாசிகளின் இல்லங்கள், நடன ஆலயங்கள், இசைக்கல்லூரிகள், திண்ணைக் பள்ளிக்கூடங்கள் போன்றன கோயிலுக்குரியதாக கட்டப்பட்டிருந்தன எனக் கற்றிருக்கின்றோம்.

இங்கு முகநூல் பல விடயங்களைத் தனக்குள் அடக்கி எம்மவரிடையேயும் உயர்ந்து நிற்பதை இப்போது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

**கௌசி சிவபாலன்...**
ஜெர்மனி





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வெள்ளவத்தை புகையிரத நிலையத்தை அண்மித்த கடற்பரப்பில் ஆடி அமாவாசை விரத பிதிர்க்கடன் செலுத்தும் விரதம் நேற்றுமுன்தினம் (28)அனுஷ்டிக்கப்பட்டது. பக்தர்கள் விரதத்திற்கான தர்ப்பன வழிபாட்டு முறைகளை குருக்களின் முன்னால் அமர்ந்திருந்து நிறை வேற்றியபின் சங்கமத்தில் நீராடினர்.

'ஓகஸ்ட் 9 போராட்டம்'

# சரத் பொன்சேகாவின் அறிவிப்பு ஐ .ம.சக்தியின் அறிவிப்பு அல்ல

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி தெரிவிப்பு



ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிரான இறுதிப் போராகக் கூறப்படும் ஒகஸ்ட் 9ஆம் திகதி நடைபெறும் போராட்டத்தில் தானும் ஏனையோரும் பங்கேற்பதாக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்த போதிலும் அதில் பங்கேற்பது தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தி, தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்த அவர், ஒகஸ்ட் 9ம் திகதி எந்த ஒரு போராட்டத்திலும் பங்கேற்கும் எந்த முடிவிலும் கட்சி அதிகாரப்பூர்வமாக எந்த முடிவும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். சரத் பொன்சேகாவின் கருத்து தொடர்பில் அவரிடமே கேட்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் அரசியல்வாதிகளை ஆட்சியில் இருந்து அகற்றி ஊழல் அற்ற அனைவரையும் உள்ளடக்கிய புதிய நிர்வாகத்தை அமைப்பதற்கான இறுதிப் போருக்கு அழைப்பு விடுத்துள்ள ஒகஸ்ட் 9ம் திகதி போராட்ட இளைஞர்களுடன் இணைந்து மாபெரும் போராட்டத்தில் தானும் தனது கட்சியும் பங்கேற்கவுள்ளதாக ஜூலை 27 அன்று பாராளுமன்றத்தில் பீல்ட் மார்ஷல் தெரிவித்திருந்தார்.

நெதர்லாந்திலிருந்து தபால் மூலம் அனுப்பபப்பட்ட

# 03 கோடி ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் மீட்பு



நெதர்லாந்திலிருந்து தபால் மூலம் அனுப்பப்பட்ட சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான 2,973 மெத்தம் பெட்டமைன் மாத்திரைகளை இலங்கை சுங்கத்தின் மத்திய தபால் பரிவர்த்தனை பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியதாக சுங்க ஊடகப் பேச்சாளர், பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்தார்.

நெதர்லாந்திலிருந்து கனேமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருக்கு கால்ளை மசாஜ்செய்யும் இயந்திரம் என அனுப்பப்பட்ட இந்தபொதி தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இயந்திரத்தை திறந்து பார்த்த போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பான ஆரம்பகட்ட விசாரணையின் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் பொதிகள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர், சுங்கப் பணிப்பாளர் சுதத் த சில்வா மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் அதன் தாக்கம் குறித்து உலக வங்கிஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மருந்துகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு, வரிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையைப் போக்க கடந்த காலங்களில் உலக வங்கியால் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.இன்றுவரை, இந்த நிதியில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்டுள்ளன.

இந்த வளங்கள் ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக வலுவான கட்டுப்பாடுகள் மற்றும் நம்பிக்கைக்குரிய மேற்பார்வையை நிறுவுவதற்கு, அதனை செயல்படுத்தும் முகவர்களுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். இதனை தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணிப்போம். இலங்கை மக்களுக்கு எங்களுடைய ஆதரவினை அதிகரிக்க மற்ற அபிவிருத்தி பங்காளிகளுடன் நாங்கள் நெருக்கமாக ஒருங்கிணைத்து வருகிறோம்.

போதுமான பேரின பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க திட்டமிடவில்லை. இதற்கு பொருளாதார ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்ட ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

மேலும் இந்த நெருக்கடியை உருவாக்கிய அடிப்படை கட்டமைப்பு காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் எதிர்கால மீட்சி மற்றும் அபிவிருத்தி மீள்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

# கொழும்பு எல்லைக்குள் முகக்கவசம் கட்டாயம்

### கொழும்பு மாநகர சபை அறிவிப்பு

கொழும்பு மாநகர எல்லைக்குள் கடமைக்காக வருபவர்கள் மற்றும் கொழும்பு நகர எல்லைக்குள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருப்பவர்கள் என அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற் கொண்டு அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கொழும்பு நகர எல்லையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதி மாளிகையிலிருந்த...

நிலைய பொறுப்பதிகாரியிடம் எண்ணி ஒப்படைக்கும் வீடியோ காணொளியை மையப்படுத்தி, அக்காணொளியில் இருந்த நால்வர், கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணை பணியக அதிகாரிகளால், கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று முன்தினம் (28) நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே, அவர்களுக்காக மன்றில் ஆஜரான சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்னவின் வாதங்களையடுத்து கோட்டை நீதிவான் இந்த பணத்தொகையை நீதிமன்றில் ஒப்படைக்க உத்தரவைப் பிறப்பித்தார். இதனையடுத்தே நேற்று அப்பணம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது, போராட்டக்காரர்கள் பணத்தை கையளித்து 3 வாரங்களுக்கு மேல் காலம் கடந்த போதும், அதனை நீதிமன்றில் ஒப்படைக்க கால தாமதமதமானது ஏன், அது தொடர்பில் நீதிமன்றுக்கு ஒரு அறிக்கையை கூட தாக்கல் செய்யாதது ஏன் என்பனவற்றை உள்ளடக்கி நீதிமன்றுக்கு விளக்கமளிக்குமாறு வலய குற்ற விசாரணை பணியக பணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## கொவிட் தடுப்பூசி...

தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்காக தடுப்பூசிகள் போதுமானளவு காணப்படுவதாகவும் அருகாமையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்திலோ அல்லது வைத்தியசாலையிலோ தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியமெனவும் அவர் தெரிவித்தார்.

## கண்ணீர்ப்புகை... (03 ஆம் பக்கத் தொடர்)

பிரிவுக்குட்பட்ட முச்சக்கரவண்டியில் இருந்து இந்த சந்தேக நபர் கண்ணீர் புகைக்குண்டுகளை கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெலிவத்த கொட்டேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஆர்ப்பாட்டக்காரர்களுடன்...

காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அவர் கருத்துக்களை கேட்டறிந்து அங்கிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்ற... (03 ஆம் பக்கத் தொடர்)

முடிவுக்குக் கொண்டுவந்து ஜனாதிபதியின் அறிவிப்பு உள்ளடங்கிய 2022.07.28ஆம் திகதிய 2290/35 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் தொடர்பான பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரம் மற்றும் அது தொடர்பான தகவல்களை பாராளுமன்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வேகமாக பரவத்... (03 ஆம் பக்கத் தொடர்)

எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் தங்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறவும் குறைந்தபட்சம் மூடிய அறைக்குள் முகக்கவசங்களை அணியவேண்டும் என்றும் சந்திம ஜீவந்தர கோரியுள்ளார்.

இதேவேளை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று முன்தினம் (28) மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அரசாங்கத் தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 143 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 665,543ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சகோதரிகள் இருவர் ரயிலில்...

கோட்டையில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த ரயிலில் மோதியதில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த யுவதியும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் யுவதியும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் என தெரியவந்துள்ளது.

## நாட்டில் கொவிட் தொற்று...

பரவுவதைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் கூறினார்.

குறிப்பிட்ட அளவு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளுமாறும், அதற்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், நாட்டில் கொவிட்19 பரவுவதை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும் கூறினார்.

## IMF உடனான பேச்சுக்களில்...

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள வேண்டுமாயின், கடன் நிலைபேற்றுத்தன்மை குறித்து முறையான தொரு திட்டம் முன்வைக்கப்பட வேண்டி இருந்தது. கடந்த காலத்தில் காணப்பட்ட ஸ்திரதன்மையற்ற அரசியல் நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படாத முன்னைய அரசாங்கத்தின் அரசியல் கொள்கை காரணமாக இது தடைப்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், முழுமையான அரசியல் ஸ்திரத்தன்மை கொண்ட அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

அதேபோன்று, சர்வகட்சி ஆட்சிக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளும் மிகவும் வெற்றிகரமான நிலையில் உள்ளன.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அராஜக நடவடிக்கைகளில் ...

எடுக்க முடியாது. அமைதி வழி போராட்டக்காரர்களை நான் அன்றும் மதித்தேன், இன்றும் மதிக்கின்றேன்.

ஆனால், போராட்டம் என்ற பெயரில் பொது சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களையும், அரச கட்டடங்களுக்குள் நுழைந்து பொருட்களை திருடியவர்களையும் மன்னிக்க முடியாது. அவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களை கைதுசெய்து வருகின்றனர். குற்றாவளிகளுக்கு எதிராக நீதிமன்றம் தண்டனையை வழங்கும். இதில் எவரும் தலையிட முடியாது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒளிபரப்பு சேவைகளுக்கு இடையூறு விளைத்தவர்களை எப்படி மன்னிக்க முடியும்? அவர்களை எப்படி அகிம்சை வழி போராட்டக்காரர்கள் என்று கூற முடியும்? "எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஜனாதிபதியின் கொடியை...

மேற்படிநபர் முன்னாள் ஜனாதிபதி இலட்சினை கொடியை, படுக்கை விரிப்பாக பயன்படுத்தி, சமூக வலைத்தளத்தில் காணொளிகளையும் பகிர்ந்திருந்தார்.

இந்நிலையில், சி.சி.டி.வி. காணொளிகளை மையப்படுத்தி பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அந்நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவரென தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் ஐக்கிய மக்கள் சக்தியின் துறைமுக தொழிற் சங்கத்தின் முன்னாள் தலைவர் களுதந்திரிகே உதேனி ஜயரத்ன எனவும் பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் அதன் தாக்கம் குறித்து உலக வங்கிஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மருந்துகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு, வரிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையைப் போக்க கடந்த காலங்களில் உலக வங்கியால் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றுவரை, இந்த நிதியில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்டுள்ளன.

இந்த வளங்கள் ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக வலுவான கட்டுப்பாடுகள் மற்றும் நம்பிக்கைக்குரிய மேற்பார்வையை நிறுவுவதற்கு, அதனை செயல்படுத்தும் முகவர்களுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்.

இதனை தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணிப்போம். இலங்கை மக்களுக்கு எங்களுடைய ஆதரவினை அதிகரிக்க மற்ற அபிவிருத்தி பங்காளிகளுடன் நாங்கள் நெருக்கமாக ஒருங்கிணைத்து வருகிறோம்.

போதுமான பேரின பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க திட்டமிடவில்லை. இதற்கு பொருளாதார ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்ட ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

மேலும் இந்த நெருக்கடியை உருவாக்கிய அடிப்படை கட்டமைப்பு காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் எதிர்கால மீட்சி மற்றும் அபிவிருத்தி மீள்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

## நோர்வூட்டில் மாணவர்களுக்கு...

வழங்கப்பட்டது.

சுமார் 04 பாடசாலைகளைச் சேர்ந்த மேற்படி மாணவர்களுக்கு நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து காலை 9 மணி முதல் 11 மணிவரை தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நாட்டில் தற்போது கொரோனாவின் தாக்கம் மீளஎழுச்சி பெற்றுள்ள நிலையில் மாணவர்களுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட்டமை சிறந்த செயலாக காணப்படுவதாக ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களும் தெரிவித்தனர். மாணவர்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி மாளிகையிலிருந்த...

நிலைய பொறுப்பதிகாரியிடம் எண்ணி ஒப்படைக்கும் வீடியோ காணொளியை மையப்படுத்தி, அக்காணொளியில் இருந்த நால்வர், கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணை பணியக அதிகாரிகளால், கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று முன்தினம் (28) நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே, அவர்களுக்காக மன்றில் ஆஜரான சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்னவின் வாதங்களையடுத்து கோட்டை நீதிவான் இந்த பணத்தொகையை நீதிமன்றில் ஒப்படைக்க உத்தரவைப் பிறப்பித்தார்.

இதனையடுத்தே நேற்று அப்பணம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது. இதன்போது, போராட்டக்காரர்கள் பணத்தை கையளித்து 3 வாரங்களுக்கு மேல் காலம் கடந்த போதும், அதனை நீதிமன்றில் ஒப்படைக்க கால தாமதமதமானது ஏன், அது தொடர்பில் நீதிமன்றுக்கு ஒரு அறிக்கையை கூட தாக்கல் செய்யாதது ஏன் என்பனவற்றை உள்ளடக்கி நீதிமன்றுக்கு விளக்கமளிக்குமாறு வலய குற்ற விசாரணை பணியக பணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## மோட்டார் சைக்கிள்கள் மீது...

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை மிதித்து துவசம் செய்துள்ளன.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் முதல்நாள் நள்ளிரவு வேளையில் மழை பெய்ததால் பெற்றோலுக்காக வரிசையில் காத்திருந்தவர்கள் தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைத்துவிட்டு மழைக்கு ஒதுங்கியிருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## பெண் பொலிஸ் உத்தியோகத்தரின்...

பண்டாரவளை வெலிபன்ன, மகுலெல்ல பகுதியைச் சேர்ந்த சாமிலா (6761) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே பண்டாரவளை – ஹில்ஓயா பிரதான வீதியில் தான் கண்டெடுத்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், வங்கி அட்டை, அடையாள அட்டை , சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் 142,370 ரூபா பணம் என்பவற்றை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார். இதனை சக பொலிஸ் உத்தியோகத்தினர் உட்பட பலரும் பாராட்டி வருகின்றனர்.

பண்டாரவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உரிமையாளரை கண்டுபிடித்து பணம் மற்றும் அவரது அனைத்து உடைமைகளையும் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறான பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு கௌரவத்தை ஏற்படுத்துவதாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கலிங்க ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு உதவ கமல்ஹாசன்...

கமல்ஹாசன் துணை உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடினார். இதன்போது அவர்கள் சினிமா துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதித்தனர். கமல்ஹாசனை, நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் திரையுலகக் குழு மற்றும் நாடகக் குழு உறுப்பினர்களுடன் இலங்கைக்கு வருகை தருமாறு பிரதி உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது கமல்ஹாசன் தனது நலன்புரிச் சங்கத்தின் மூலம் 'இலங்கையை ஆதரிப்பதில்' விருப்பம் தெரிவித்திருந்தார்.

## சுற்றறிக்கைகள் மூலம் தண்டனை வழங்குவதை...

அலுவலகத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையினருடன் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசியல்வாதிகள், கோடீஸ்வரர்கள் மற்றும் மோசடி செய்பவர்களுக்கு இல்லாத தண்டனை நாட்டின் பொருளாதார இயந்திரத்தை கையாளும் நபர்களை இலக்காகக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். "சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆதரவற்ற நிலையில் இருக்கும்போது, பாராளுமன்ற அமைச்சர்கள் அரசியல் விளையாட்டுகளை விளையாடுகிறார்கள்," என்று அவர் மேலும் கூறினார்.




### வயிற்றில் கன்றுடன் பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய

# தோட்ட மாவட்ட தலைவர் உட்பட ஆறு பேருக்கு விளக்கமறியல்

**ஆ.ரமேஸ்.**

தேயிலை மலையில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த செனை பசு ஒன்றை களவாடி சட்டவிரோதமாக அதை வெட்டி இறைச்சிக்காக விற்பனை செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் மாவட்ட தலைவர் (ம.ம.மு) ஒருவர் உட்பட ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 08.08.2022 வரை விளக்கமறியலில் வைக்க வலப்பனை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (28) வியாழக்கிழமை மாலை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இராகலை தொழிற்சாலை பிரிவு தோட்டத்தில் தனிநபர் ஒருவரின் செனை பசு தோட்ட தேயிலை மலையில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த போது கடந்த (27) ஆம் திகதி காணாமல் போயுள்ளது.



இது தொடர்பாக பசுவின் உரிமையாளர் இராகலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். இவரின் முறைப்பாட்டை ஏற்ற பொலிஸார் இது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு பசுவை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் (28) அன்று இராகலை தொழிற்சாலை பிரிவு தோட்டத்தில் தொழிற்சங்கத்தலைவர் ஒருவரின் காணியில் செனை பசுவின் தோலும், கால்களும் கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய இராகலை குற்றத்தடுப்பு பொலிஸார் விரைந்து சென்று இவைகளை மீட்டுள்ளனர். இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசு குட்டி ஈன இருந்த நிலையில் அதை கடத்தி ஆறு பேர் கொண்ட குழுவினர் பசுவை சட்ட விரோதமாக வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அதேநேரத்தில் இச்சம்பவம் தொடர்பில் இராகலை சின்ன ஒப்ராசி தோட்டத்தை சேர்ந்த நால்வர் மற்றும் இராகலை தொழிற்சாலை பிரிவு தோட்டத்தை சேர்ந்த இருவருமாக ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மலையகத்தின் பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் இராகலை பிரதேச மாவட்ட தலைவர் ஒருவரும் அடங்குவதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசாரணையில் இராகலை பிரதேச தோட்டப் பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்றிருந்த ஆடுகள் திருட்டு

தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள் மற்றும் உபகரணங்கள் திருட்டு சம்பவங்களுக்கும்தொடர்புள்ளமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஆறுபேரின் மீது திருட்டு சம்பவ வழக்கு பதியப்பட்டு (28) மாலை சந்தேக நபர்களை வலப்பனை நீதிமன்ற மன்றத்தில் ஆஜர் செய்த போது நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச வழக்கை விசாரணை செய்து சந்தேக நபர்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்து வழக்கை ஒத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



ஐ.எஸ்.டி நிறுவனத்தினால் பதுளை கெப்பிட்டல் சிட்டி விடுதியில் நேற்று "சமாதானமும் சக வாழ்வும்" என்ற தலைப்பில் வேலைத்திட்ட செயலமர்வு நடைபெற்றது.

படம் பதுளை தினகரன் விசேட நிருபர்

## மின்னல் தாக்கி ஒருவர் மரணம் நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை தாமஹன பிரதேசத்தில் தோட்டமொன்றில் மண்வெட்டிகளால் வேலை செய்து கொண்டிருந்த நான்கு பெண்கள் மீது மின்னல் தாக்கியுள்ளது. இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. தோட்டமொன்றில் வேலை செய்து கொண்டிருந்த இவர்களில் ஒரு பெண் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

மரணமடைந்தவர் நுகஹேன வத்த பகுதியில் வசிக்கும் 26 வயதையுடைய இரண்டு குழந்தைகளின் தாய் என தெரியவந்துள்ளது.

கடுமையாகப் பாதிக்கப்பட்டு சுயநினைவை இழந்த நிலையில் ஏனைய மூன்று பெண்களும் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு



**ஹற்றன் சுழற்சி நிருபர்)**

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வறுமையை எதிர்கொண்டு வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் கையளிக்கும் நிகழ்வு கந்தப்பளையில் இடம்பெற்றது.

கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி.விக்கிரமசிங்க தலைமையில் இந்நிகழ்வு கந்தப்பளை பொலிஸ் நிலைய வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின் பேரில் பிரஜா பொலிஸ் பிரிவு மற்றும் கந்தப்பளை நகரின் வர்த்தக சங்கத்தினரின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 வறிய குடும்பங்களுக்கான அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் அதிதிகளாக நுவரெலியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகமசூரிய மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பஷநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டு, பொதிகளை வழங்கி வைத்தனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் 19 தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு





**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நோர்வூட் பகுதியில் 13 17 வயது பிரிவு மாணவர்களுக்கு 'பைசர்' தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் நேற்று (29.07.2022) முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் நோர்வூட் பிரதேசத்திலுள்ள முதலாம் கட்ட கொவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி நேற்று ஏற்றப்பட்டது.

சுமார் 04 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து காலை 9 மணி முதல் 11 மணிவரை தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நாட்டில் தற்போது கொரோனாவின் தாக்கம் மீள்எழுச்சி பெற்றுள்ள நிலையில் மாணவர்களுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட்டமை சிறந்த செயலாக காணப்படுவதாக பலரும் தெரிவித்தனர்.

மாணவர்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டதை அவதானிக்கமுடிந்தது.

## ஆசிரிய உதவியாளர்களின் பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிடுமாறு கோரிக்கை

**(அவிசாவளை நிருபர்)**

ஆசிரியர் பயிற்சியினை முடித்த ஆசிரிய உதவியாளர்களின் இறுதித் தேர்வுக்கான முடிவுகள் இதுவரை வெளியிடப்படாமை குறித்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2015 ஆண்டு ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு, வர்த்தமானியின் பிரகாரம் ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு உள்வாங்கப்பட்டு ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளது.

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் குறிப்பாக பெருந்தோட்டத்துறையில் பணிபுரியும் இந்த ஆசிரிய உதவியாளர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட வேண்டும். இதுபற்றி எமது சங்கம் முன்னரும் அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்தபோதும், பரீட்சை திணைக்களம் இதுவரை காலமும் தமது பொறுப்புக்களை தட்டிக் கழித்து வந்ததன் மூலம் இவ் ஆசிரிய உதவியாளர்கள் மேலும் ஒடுக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக, கல்விமாணி பட்டப் படிப்புகளைப்(B.Ed) கற்கும் வாய்ப்பினையும் இழந்துள்ளனர்.

மேலும், அவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 311 க்கு உள்வாங்கி, உரிய சம்பளத்தினை நிர்ணயித்து பயிற்சிக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்தோம், ஆனால் மிகவும் கடினமான சூழ்நிலையில் இந்த ஆசிரிய உதவியாளர்கள் உதவித்தொகையாக கிடைத்த ரூ. 10,000 மட்டுமே பெற்றுக் கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து தமது பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலும் மிகவும் சிரமமான சூழ்நிலையிலும் பணிபுரியும் இந்த ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டு இலங்கை ஆசிரிய சேவையின் 31 தரத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டும். பெறுபேறுகளின் அடிப்படையில் உரிய சம்பள விகிதத்தில் நியமனங்கள் இடம் பெற வேண்டும்,

இல்லையெனில் அநீதி இழைக்கப்பட்ட இந்த ஆசிரியர்களுக்காக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடுமையாக வலியுறுத்துகின்றது எனக் குறிப்பிட்டு இக் கடிதத்தின் பிரதிகள் கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் போன்றோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் குறிப்பிட்டார்.

## சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் 797 ஆவது வருடாந்த பெரஹெர



வரலாற்று சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் 797 ஆவது வருடாந்த பெரஹெர எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பெரஹெர நடாத்துவது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம்(27) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நாட்டில் தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய மேற்படி பெரஹெர நிகழ்வை நடாத்துவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தேவாலயத்தின் பெரஹேர எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகி செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பௌத்த மத குருமார்கள் மற்றும் சப்ரகமுவ மகா சமன்தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே மிகார ஜயசுந்தர இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபேகாத்தாகம உட்பட அரச அதிகாரிகள் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முத்தேர் பவனி

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா மாக்கஸ் தோட்டம் கீழ் பிரிவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகமும் முத்தேர் பவனியும் இன்று (30) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகமும் நிறைவு பெற்று முத்தேர் பவனி இன்று நடைபெறவுள்ளது. இத்தேர்திருவிழாவின் கிரியா கால நிகழ்வுகள் நேற்று முன்தினம் (28) வியாழக்கிழமை காலை 6:30 மணிக்கு விசேட அபிஷேக பூஜையுடன் ஆரம்பித்து மஹாசங்காபிஷேகம் நடைபெற்று பகல் மகேஸ்வர பூஜையை தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நேற்று (29) வெள்ளிக்கிழமை காலை 9:30 மணிக்கு முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது. பகல் 12 மணிக்கு விஷேட தீப ஆராதனை நடைபெற்று மாலை 6 மணிக்கு திருவிளக்கு பூஜை, சுமங்கலி பூஜை,கன்னி பெண்கள் பூஜை,லட்சுமி நாராயண பூஜை நடைபெற்று சுவாமி உள் வீதி ஊர்வலமும் நடைபெற்றது. இன்று (30) சனிக்கிழமை காலை 8 மணிக்கு வழமையான பூஜை, வசந்த மண்டப பூஜை, வேதஸ்தோத்திரம் நடைபெறும்.

## பஸ் சாரதிகளின் போட்டியால் பொது மக்களுக்கு பாதிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி எம்பிலிபிட்டிய வீதியில் தனியார் பஸ் வண்டிகள் எல்லை மீறிய வேகத்தில் பயணிப்பதால் பொது மக்கள் பல ஆபத்துக்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களை இணைக்கும் பிரபலம் பெற்றுள்ள இப்பிரதான வீதி கொழும்பு கிழக்கு மாகாணத்தின் முக்கியமான போக்குவரத்து முக்கியத்துவமான சன நடமாட்டமுள்ள பிரதான சாலையாகவும் விளங்குகிறது. எனினும் இவ்வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பஸ் வண்டிகளின் கட்டுப்பாடற்ற கடுமையான வேகம் பெரும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளன. இவ்வீதியில் அதிக விபத்துக்கள் அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட தனியார் பஸ் வண்டிகளின் சாரதிகளின் போக்குவரத்து விதிகளை மீறும் செயற்பாடுகளே என சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக மேற்படி பஸ் வண்டிகளில் சிறு குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அச்சுறுத்தல் நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நகர்வலம்



# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டத்தை, ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தி அதிகார சபை அறிமுகப்படுத்தியுள்ளது. 60 வயது நிறைவடைந்தவுடன் ஓய்வூதியம் வழங்க இதன் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களிலும் சுமார் 2600 முன்பள்ளி ஆசிரியர்கள் கடமையில் உள்ளனர். இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படை செயற்பாடுகளை அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 31 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாக வடமத்திய மாகாண பாலர் பாடசாலையின் பணிப்பாளர் திரு நிலந்த ஏகநாயக்க தெரிவித்தார்.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் நிதி நெருக்கடிகளை ஈடுசெய்ய, வடமத்திய மாகாண சபையிடமிருந்து தேவையான உதவிகளை வழங்க ஆளுநர் இணங்கியுள்ளதாகவும், இது பற்றி மேலும் அவர் தெரிவித்தார். வேலைத்திட்டம் பற்றிய தகவல்கள் மற்றும் விண்ணப்பங்கள் பிரதேச செயலக மட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.





கர்நாடகாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்தியாவுக்கான இலங்கைத் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன், (21) கர்நாடக மாநிலத்தின் தலைமைச் செயலாளர் திருமதி வந்திதா சர்மாவை கர்நாடக சட்டமன்ற வளாகமான விதான சவுதாவில் சந்தித்தார். பிரதி உயர்ஸ்தானிகரது நியமனத்திற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்த தலைமைச் செயலாளர், இலங்கையின் நெருக்கடியான சூழலுக்கு ஆதரவளிப்பதற்கான' சாத்திய வழிகள் குறித்தும் துணை உயர் ஸ்தானிகருடன் கலந்துரையாடினார்.




இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்தமொரகொட அண்மையில்,தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாக குஜராத்துக்குச் சென்றார்.அங்கு 1946 இல் நிறுவப்பட்ட உலகின் பத்தாவது பாரிய பால்பண்ணையையும் அவர் பார்வையிட்டார். மூன்று மில்லியனுக்கும் அதிகமான உழவர்கள் இங்கு பங்குதாரர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. விவசாயிகள் சுரண்டப்படுவதை தடுக்கும் நோக்கில் இந்தப்பாரிய பால் பண்ணை அமைக்கப்பட்டது. அவரது விஜயத்தை நினைவுகூர்ந்து நினைவுச்சின்னம் பரிமாறப்படுவதை படத்தில் காணலாம்.


# உலக அலவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் மறைவிற்கு மர்ஜான் பளீல் எம்.பி அனுதாபம்

உலக அலவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர்களில் ஒருவரும் நவீனகால இஸ்லாமிய அறிஞருமான அஷ்ஷெய்ஹ் அல்லாமா அபூபக்கர் அலீ அல் மஷ்ஹூர் மௌலானா அவர்களின் திடீர் மரணச்செய்தியை கேள்வயைுற்று,மிகவும் கவலையடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

அவரின், அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யெமன் நாட்டை பூர்வீகமாகக் கொண்ட அன்னார் (27) ஜோர்தான் நாட்டில் காலமானார். அன்னாரின் ஜனாஸா வெள்ளிக்கிழமை (28) விசேட விமானத்தில் யெமனுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள ஹழரல் மௌத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னார் உலகம் போற்றும் ஆன்மீகத்தலைவராக இருந்து கல்விப்பணி செய்தார். அத்துடன் மாத்திரம் நின்று விடாமல் பல முஸ்லிம் நாடுகளுக்கும் விஜயம் செய்து அங்கு கலாநிலையங்களையும் உருவாக்கி, இஸ்லாமிய தஃவாத் துறைக்கும் பாரிய பங்களிப்பையும் மேற்கொண்டார்.



இலங்கைக்கு பல முறை விஜயம் செய்த ஷெய்ஹ் மஷ்ஹூர் மௌலானா அவர்கள்,பேருவளை பிரதேசத்திற்கும் வருகை தந்து பல நிகழ்வுகளிலும் பங்கேற்றார். எமது ஊரிலுள்ள சீனன் கோட்டைஜாமியதுல்பாஸிய்யாகலா பீடம் மற்றும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்திலும் அவர் விரிவுரைகளையும் நிகழ்த்தினார்.

நான், பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின் அன்னாரை அவரது ஒன்றுவிட்ட சகோதரரரின் மகனான தர்கா நகரைச் சேர்ந்த அப்துல் காதர் மசூர் மௌலானாவுடன் சேர்ந்து சவூதி அரேபிய ஜித்தாவில் வைத்து மரியாதையின் நிமித்தம் சந்தித்தேன்.

சுன்னதுல் வல்ஜமாஅத்தின் கொள்கையில் உறுதியுடன் வாழ்ந்த அன்னாரின் சகல நற்காரியங்களையும் வல்ல நாயன் கபூல் செய்து, அன்னாருக்கு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ் கிடைக்க பிரார்த்திப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்,தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# கோஷ்டிச் சண்டையில் ஒருவர் வெட்டிக்கொலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது கூரிய ஆயுதமொன்றினால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக எப்பாவல பியங்கரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியங்கரகம பொகுனுகம பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 25 வயதுடைய யாய 07,பொகுனுகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சைக்காகவென, எப்பாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அவர், அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.உயிரிழந்தவருடைய சடலம் தற்சமயம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# இங்கிரியவில் கிவ், ஆர் குறியீடு வழங்கும் நிகழ்வு

வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கான அனுமதிப்பத்திரம் பெறாத பயனாளர்களுக்கான இலவச QR குறியீடு வழங்கும் நிகழ்வு, இங்கிரிய இளைஞர் மன்றத்தின் பிராந்திய சபையின் சார்பில் றைகம் மேற்பிரிவு சனசமூக மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கிரிய பிரதேச செயலகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இங்கிரிய இளைஞர் சேவையின் பணியாளர் சிந்தக மகேஷ் கன்கந்தவின் தலைமை ஒருங்கமைப்பில்,

இங்கிரிய, றைகம உதயம் இளைஞர் மன்றத்தின் தலைவர் துசாந்தன் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் ஸ்ரீநாத் உள்ளிட்ட மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்து கொண்டதுடன், பயனாளர்களுக்கு QR குறியீடும் வழங்கப்பட்டது.



கிவ்,ஆர் குறியீடு அச்சிடுவதற்கான அனுசரணை வழங்கிய இளைஞர் மன்ற மண்டல வாரியத்தின் முன்னாள் துணைத் தலைவர் சசித் ஜீவந்த, மற்றும் தொழிநுட்பவியலாளர்களான இளைஞர் கழக பிராந்திய சபையின் தலைவர் மதுக சதுரங்க, துணை செயலாளர் கசுனி ஷானிகா மற்றும் பெத்தும் அனுலசித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# களுத்துறை மாவட்டத்தில் சைக்கிள் பாவனை அதிகரிப்பு

**பேருவளை தினகரன் விஷேட நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் தற்போது சைக்கிள் பாவனை பல மடங்காக அதிகரித்துள்ளது. எரிபொருள் இல்லாமை, எரிபொருளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாகவே, சைக்கிள் பாவனைகள் அதிகரித்துள்ளன. சைக்கிளை மக்கள் கூடுதலாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளதால் புதிய சைக்கிள்களின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. வீடுகளில் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்த பழைய சைக்கிள்கள் திருத்தப்பட்டு, அவைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய சைக்கிள்களின் விலைகளும் அதிகரித்துள்ளதால், உதிரிப் பாகங்களின் விலைகளும், திருத்துவதற்கான கூலியும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீதிகளில் மோட்டார் சைக்கிள்கள் குறைந்து, துவிச்சக்கர வண்டிகளின் பாவனைகளும் அதிகரித்துள்ளன.

# எரிபொருட்கள் கூடுதல் விலைக்கு விற்பனை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் தம்புத்தேகம மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் ஒரு லீட்டர் பெற்றோல் மற்றும் டீசல் 2000 3000 ரூபா வரை விற்பனை செய்வதில், ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட குழுவினர் செயற்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல நாட்களுக்கு பின்பு இராஜாங்கனை மற்றும் தம்புத்தேகம எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் கிடைத்துள்ளது.

இதையடுத்து, ஒரு குழுவினர் பல்வேறு தரப்பினர்களின் உதவியுடன் எரிபொருளை பெற்று சேகரித்து வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். வாகன இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட போதும், நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் எரிபொருள் கிடைக்காமல் பல நாட்களாக வரிசையில் காத்து நிற்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையை சாதகமாக பயன்படுத்தி எரிபொருளை கூடுதலான விலைக்கு விநியோகித்து வருவதாகவும் பொது மக்கள் மேலும் தெரிவித்தனர்.



சமுர்த்தி வீட்டு லொத்தர் வெற்றியாளர்களுக்கான ரூபா 2,00,000/ காசோலை வழங்கும் நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. அஹமட் சாபீர் வெற்றியாளர்களுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார். இதில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட், சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம். உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

படம்: திராய்க்கேணி நிருபர்

# உயர்தரப் பிரிவுக்கு பாடங்களை தெரிவு செய்வதற்கான கருத்தரங்கு





**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

க.பொ.த. உயர்தரப் பிரிவிலுள்ள பாடங்களைத் தெரிவுசெய்து உரிய முறையில் கல்வி பயில்வதற்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் நடாத்தப்பட்டது. சிலாபம் கல்வி வலயப் பிரிவிலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில்

கல்வி பயின்று 2021ம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. கொட்டராமுல்லை பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.ஜே.எம். றியாசத் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, களனி மற்றும் வவுனியா ஆகிய பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் கொட்டராமுல்ல மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஒன்றியத்தில் இணைந்து கொண்டு, மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களுடன் பல்கலைக்கழக மாணவர்கள் கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொண்டனர்.

# பொருளாதார நெருக்கடி குளங்களின் புனரமைப்பு பணிகளில் தாமதம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நாட்டில்,தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால், அநுராதபுரம் மாவட்டத்தில் மத்திய தரத்திலுள்ள பல குளங்களின் திருத்த பணிகளிலும் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அநுராதபுரம் வலய நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் சுசந்த டீ மெதிவக தெரிவித்தார். அண்மையில் (26) நடந்த விவசாய சங்ககூட்டத்தின் போதே இதனை அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பெரும்போகத்திற்கான மழைக்கு முன்னர் குளங்களின் திருத்தப்பணிகளை விரைவில் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. இல்லாவிடின் குளங்களின் அமைப்பு சேதமடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

கெபித்திகொல்லாவ, பண்டாரஉள்பதாவ குளம், நொச்சியாகம, மகாலிதவெவ, மகாவிலச்சிய தென் கரை, மகாமான்கடவல குளம், எலயாப்பத்துவ குளம், ரம்பாவ கள்ளஞ்சிய குளம், மகாவுளங்குளத்தின் கட்டு என்பனவே திருத்தம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## வீட்டுத்தோட்ட உற்பத்திகளை ஊக்குவிக்க மரக்கறி, பழக்கன்றுகள் விநியோகம்

கல்குடா தினகரன் நிருபர்

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில், உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மரக்கறிக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினால், மரக்கறிக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அல்இன்ஷானியா நிறுவனம் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கான இரண்டு பழமரக்கன்றுகள் உள்ளடங்கலாக மிளகாய், கத்தரி, தக்காளிக் கன்றுகளை பகிர்ந்தளித்தது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீதான

# தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்




கல்லடி குறூப், மட்டக்களப்ப குறூப் நிருபர்கள்

காலிமுகத்திடல் அமைதிவழிப் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று (29) காலை 11.30 மணியளவில் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து, இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அமைதிவழிப் போராட்டக்காரர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை இவர்கள் வன்மையாகக் கண்டித்து கோஷங்களையும் எழுப்பினர்.

அமைதிவழிப் போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தாக்குவதை நிறுத்துமாறு கோருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து போராட்டக்காரர்களையும் உடன் விடுவிக்குமாறு கோரியதுடன், மக்கள் போராட்டத்துக்கு மண்டியிடுவதாகவும் தெரிவித்தனர்.

முழுநாடும் ஜனநாயக ஆட்சி மாற்றத்துக்காக காத்திருந்தது. எனினும், மக்கள் போராட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமாற்றத்தின் காரணமாக அதிகாரத்துக்கு வந்தவர்கள், அதே மக்களுக்கு எதிராக திரும்பி மக்களின் குரலை நசுக்குவது சந்தர்ப்பவாதமாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## யானை தாக்கியதில் மோட்டார் சைக்கிள்கள் சேதம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில், எரிபொருளை பெற்றுக்கொள்ள வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை காட்டு யானைகள் நேற்று வெள்ளிக்கிழமை (29) அதிகாலையில் சேதமாக்கியுள்ளன.

இத்தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள்களில் இரு வண்டிகள் முழுமையாகவும், ஏனையவை பகுதி அளவிலும் சேமடைந்திருந்தன.

## எரிபொருள் நிலையத்தில் கைகலப்பு ஒருவர் காயம், ஒருவர் கைது

மண்டூர் தினகரன் நிருபர்

வெல்லாவெளியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதில், ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருளை பெறுவதற்காக இரு நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்தவர்களில், இருவருக்கிடையில் தங்களின் மோட்டார் வாகனங்களை நிரல்படுத்துவதில் ஏற்பட்ட வாய்தர்க்கம், கடைசியில் கைகலப்பாக மாறியது. இதன்போது மண்டூர் பிரதேசத்தை சேர்ந்தவர் ஒருவர் பலமாக தாக்கப்பட்டார். இதையடுத்து ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் சம்பவத்தில பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த சில தினங்களாக வெல்லாவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இரண்டு எரிபொருள் நிலையங்களில், எரிபொருளுக்காக காத்திருக்கும் நபர்களிடையே கலவரம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

உரிய அதிகாரிகள் பொது மக்களின் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்காததே காரணம் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில், கிவ், ஆர் நடமுறையில் எரிபொருள் விநியோகம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் கிவ், ஆர் பரிசோதனை மற்றும் வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் சுமுகமாகவும் நேர்த்தியான முறையிலும் எரிபொருட்கள் வழங்கப்பட்டன..

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் உத்தியோகத்தர்களின் கிவ்,ஆர் பரிசோதனை உதவியுடன் அக்கரைப்பற்று பொலிஸாரின் ஒத்துழைப்போடு, இவை விநியோகிக்கப்பட்டன.

எரிபொருள் நிரப்பு நிலைய தலைவர் மற்றும் முகாமையாளர் உள்ளிட்ட ஊழியர்களால் பெற்றோல் விநியோகம் சீராக விநியோகிக்கப்பட்டது.

பெற்றோல் விநியோகம் அமைதியாக ஆரம்பமான நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் கூட்டுறவு சங்க ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய ஜெனரேட்டர் வசதியுடன், எரிபொருள் வழங்க எரிபொருள் நிரப்பு நிலைய நிருவாகம் நடவடிக்கை எடுத்தது.

எவ்வித தடைகளுமின்றி மிகவும் சீரான முறையில் 6, 7, 8, 9 இறுதி இலக்கங்களையுடைய வாகனங்களுக்கு எரிபொருட்கள் வழங்கப்பட்டன.

பெண்கள், மதகுருமாருக்கென தனியாக ஒரு வரிசை அமைக்கப்பட்டிருந்தது.

## புகையிரதத்தில் காட்டு யானை மோதி உயிரிழப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், காட்டு யானையொன்று கடுகதி புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளதாக அக்கோபர பொலிஸார் தெரிவிக்கின்றனர். கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற புகையிரதத்தில், அக்போபுர பகுதியில் வைத்து, இந்த காட்டு யானை மோதியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்துள்ள யானைக்கு பன்னிரண்டு வயதிருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். யானை மோதியதில் உடல் வேறாக நசுங்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் விநியோகம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

பொருளாதார நெருக்கடி நிலவும் இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேவையுடைய மக்களுக்கு உணவளிப்பதற்கான மனிதாபிமான செயற்பாடொன்று (26) மட்டக்களப்பு நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வபுஹாரி மொஹமட் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த இந்நிவாரணப்பணியில் பெண்கள் தலைமை தாங்கும் 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் கலந்துகொண்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாவட்டம் பூராகவுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்க இலஞ்சம் வாங்கிய முகாமையாளர் கைது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

தனியார் பஸ்களுக்கு டீசல் விநியோகிப்பதற்காக 75,000 ரூபாவை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச்சபை முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததையடுத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ( 28 ) மாலை இக்கைது இடம்பெற்றது. சம்பவ தினமன்று மாலை 5.30 மணியளவில், மாறுவேடத்தில் வந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினர் இவரைக் கைது செய்தனர்.

போக்குவரத்து சபை முகாமையாளர் கோரிய இலஞ்சப் பணமான 75, 000 ரூபாவை தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் வழங்கியபோது, இவர் கைதானார். சந்தேக நபரை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

## மூதூர் பிரதேச விவசாயிகளுக்கு இரசாயன உரம் விநியோகம்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட பிரிவில் பெருநீர்ப்பாசன திட்டத்தின் கீழ் இவ்வருட சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு, மூதூர் கமநல சேவைகள் நிலையத்தினால் இரசாயன உரம் (யூரியா) வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மூதூர் கமநல சேவை நிலையத்திற்கு கிடைத்த 500 மூடை உரங்கள் கிளாந்திமுனை, பெரும்பத்து, 15ஆம் வாய்க்கால், சாலம்பொடிவெட்டை, சாராடசேனை, ஒட்டுப்புல்வெட்டை, சம்மாந்துறை மற்றும் எரிக்கிலங்காடு உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் மூதூர் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஐ. பரீஸ் தெரிவித்தார்.

## மருதமுனையில் கிவ், ஆர் முறை மூலம் எரிபொருள் விநியோகம்



பெரியநீலாவணை விசேட நிருபர்

மருதமுனை எரிபொருள் நிலையத்தில்,அரசாங்கம் அறிமுகப்படுத்திய கிவ்,ஆர்,நடை முறையூடாக நேற்று (29) எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

எரிபொருள் உரிமையாளர் அப்துல் அசீஸ் கபீலின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய, அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இங்கு வருகை தந்து QR Code முறை மூலம் முதல் தடவையாக பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை வாகனங்களின் இறுதி இலக்கங்களுக்கு அமைய கடந்த மூன்று தினங்களாக எரிபொருளை பெற்றுக்கொள்ளாத பொதுமக்களுக்கும் நேற்றைய தினம், எரிபொருள் வழங்கப்பட்டன. இதன்போது மோட்டார் சைக்கிள்களுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கர வண்டிகளுக்கு 2000 ரூபாவிற்கும் சொகுசு கார் வாகனங்களுக்கு 7000 ரூபாவிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டது.

எனினும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் சரியாக பின்பற்றப்படவில்லை. இதனால்,பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## வைத்தியசாலை கழிவுகளை முறையாக அகற்றுவது குறித்து கலந்துரையாடல்




வெல்லாவெளி தினகரன் நிருபர்

வைத்தியசாலை கழிவுகளை சரியான திட்டமிட்ட முறையில் அகற்றும் திட்டம் குறித்த கலந்துரையாடல் மட்டக்களப்பில் இடம்பெற்றது.கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் சேரும் குப்பைகளை அகற்றுவது குறித்தே,இக்கலந்துரையாடலில் பேசப்பட்டது.

இத்திட்டத்துக்கென,யு.என்.டி.பி 1800 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது.

நோயாளிகள், இக்கலந்துரையாடலில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி. அசேல குணவர்த்தனா மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்.

## மாமாங்கம் தீர்த்தக் கரையில் ஆடி அமாவாசை பிதிர்க்கடன் தீர்க்கும் நிகழ்வு



தங்களது வாழ்வியல் மேன்மைக்காக தந்தையை இழந்தவர்கள் அனுஷ்டிக்கும் ஆடி அமாவாசை பிதிர்க்கடன் தீர்க்கும் நிகழ்வு, வியாழக்கிழமை (28) மட்டக்களப்பு மாமாங்கம் தீர்த்தக்குளக்கரையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பிதிர்க்கடன் தீர்ப்பதைக் காணலாம். படம்: மட்டக்களப்பு விஷேட நிருபர்

## மோட்டார்சைக்கிள் விபத்தில் இராணுவச்சிப்பாய் உயிரிழப்பு

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று (29) காலை உயிரிழந்ததாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா சூரங்கள் இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் 24 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுமுறைக்கு வீட்டுக்குச்சென்று கடமைக்கு திரும்பும் வேளையில், மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி இவ்விபத்து நிகழ்ந்தது.

காயமடைந்து, திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், இச்சிப்பாய் பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2022 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தில் பிரமாண்டமான ஆரம்பம்





இங்கிலாந்து பர்மிங்காமில் 2022 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் (28) பிரமாண்டமாக ஆரம்பமானது.

இப் போட்டிகள் ஆகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளது.

பர்மிங்காம் அலெக்சாண்டர் மைதானத்தில் நடைபெற்ற ஆரம்ப விழா பல சிறப்பம்சங்களுடன் நடைபெற்றன.

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா யூசுப்சாய் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், LGBTQ+ உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், 72 நாடுகளை சேர்ந்த மொத்தம் 5054 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். கொமன்வெல்த் போட்டியின் வரலாற்றில் முதல் முறையாக ஆடவர் பிரிவுகளை விட மகளிர் பிரிவில் அதிக போட்டிகள் நடைபெறுகிறது.

1998 காமன்வெல்த் போட்டிக்கு பிறகு முதல் முறையாக கிரிக்கெட் போட்டி, இந்த தொடரில் மீண்டும் ஆரம்பமாகிறது.

இதில் இந்தியா,அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்ளிட்ட மகளிர் கிரிக்கெட் அணிகள் மட்டும் பங்கேற்கின்றன.





ஆரம்ப விழாவின் சிறப்பு அம்சமாக 10 அடி உயர அனிமேட்ரோனிக் காளை மைதானத்திற்கு வந்தது.

இரும்பு மற்றும் இயந்திரத் தொழில்களுக்குப் புகழ்பெற்ற பர்மிங்காம் மற்றும் கொமன்வெல்த் ஆகியவற்றின் பன்முகக் கலாசாரத்தைக் காட்டுவதே வடிவமைப்பின் நோக்கமாக இருந்தது.

பின்னர் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு ஆரம்பமானது.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பளுதூக்கும் வீராங்கனை இந்திக்க திஸாநாயக்க மற்றும் கிரிக்கெட் வீரர் சாமரி அத்தபத்து ஆகியோர் இலங்கை கொடியை ஏந்தியவாறு அணிவகுப்பில் சென்றனர்.

விளையாட்டு நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் போட்டிக்காக 72 நாடுகளைச் சேர்ந்த 5000 விளையாட்டு வீரர்கள் 280 பதக்கங்களுக்காகப் போட்டியிடவுள்ளனர்.

### நேற்று நடைபெற்ற போட்டிகள்

### ரக்பி செவன்ஸ்

ஏழு பேர் கொண்ட ரக்பி போட்டியில் இலங்கை மகளிர் அணி, குரூப் A இன் கீழ் இங்கிலாந்துக்கு எதிராக தனது முதல் போட்டியில் பங்கேற்றது. மகளிர் அணி தனது இரண்டாவது போட்டியில் நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இலங்கையின் ஆடவருக்கான செவன்ஸ் ரக்பி அணியும் பலம் வாய்ந்த நியூசிலாந்துக்கு எதிராகப் போட்டியிட உள்ளது. இலங்கை அணியும் ஏ குழுவில் விளையாடுகிறது.

### நீச்சல் போட்டிகள்

நீச்சல் போட்டிகளின் ஆரம்ப சுற்று போட்டிகளும் நேற்று நடைபெற்றன. அகலங்க் பீரிஸ் 50 மீற்றர் பட்டர்பிளை 4வது ஆரம்ப சுற்றில் போட்டியிட உள்ளார்.

### ஜிம்னாஸ்டிக்ஸ்

மூன்று வீராங்கனைகள் இலங்கைக்காக போட்டியிடுகின்றனர். ருச்சிர பெர்னாண்டோ, கயாஷான் குமாரசிங்க மற்றும் புத்திக பெர்னாண்டோ ஆகியோராவர்.

### குத்துச்சண்டை

குத்துச்சண்டை போட்டியில் ஆடவருக்கான 6063.5 கிலோ லைட் வெல்டர் எடைப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் சஞ்சீவ பண்டார, இங்கிலாந்தின் ஜோசப் டயர்ஸுடன் ஆரம்ப சுற்று ஆட்டத்தில் விளையாடினார்.

### ஸ்குவாஷ்

ஸ்குவாஷ் போட்டியில் இரண்டு வீரர்களும் ஒரு பெண் வீரரும் போட்டிக் களத்தில் உள்ளனர். ரவிந்து லக்சிறி மற்றும் ஷமில் வக்கீல் ஆகியோர் ஆடவர் 64 சுற்றிலும், யெஹானி குருப்பு பெண்கள் 64 சுற்றிலும் விளையாடவுள்ளனர்.

### 3X3 கூடைப்பந்து

இலங்கையின் 3X3 பெண்கள் மற்றும் ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணிகள் இரண்டும் ஆண்கள் அணி ஸ்காட்லாந்தையும், பெண்கள் அணி கென்யாவையும் எதிர்கொள்கிறது.

# 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப்; இலங்கை வீரர்களின் பட்டியல் அறிவிப்பு




ஆகஸ்ட் மாதம் கொலம்பியாவின் Cali நகரில் நடைபெறவுள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் வீரர்களின் இறுதிப் பட்டியல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டித் தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தகுதி பெற்றுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை ஐந்து ஆண் மற்றும் இரண்டு பெண் வீராங்கனைகள் உட்பட 7 பேர்.

தருஷி கருணாரத்ன பெண்களுக்கான 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் போட்டிகளில் பங்குபற்றகவுள்ளார். அதேவேளை அமேஷா ஹெட்டியாராச்சி பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் அதிகூடிய ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ள ஹிருஷா ஹஷேன் உலக சம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதுடன், அவருக்கு மேலதிகமாக மும்முறை தடை தாண்டல் வீரரான பசிந்து மல்ஷானும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

கவீஷா பண்டார 110 மீற்றர் தடைதாண்டடி ஓட்டப் போட்டியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். மேலும் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் தேசிய சம்பியனான தனுக தர்ஷன இந்த வருட இளையோர் உலக சம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ருமேஷ் தரங்கா ஈட்டி எறிதல் போட்டியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

உலக தடகள சாம்பியன்ஷிப் ஆகஸ்ட் 01 முதல் 06 வரை நடைபெறவுள்ளது.

# இலங்கையின் முதலாவது சர்வதேச லீக் போட்டிகளுக்கான நடுவராக சிஹான் சுஹூத் தெரிவு

**கிண்ணியா தினகரன் நிருபர்**

இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக இங்கிலாந்து லீக் கிரிக்கெட்டின் (பிராந்திய) புகழ் பெற்ற மஞ்செஸ்டர் கிரிக்கெட் லீக்கிற்கு 2022 பருவகால தொடருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் அங்கீகாரம் பெற்று நான்கு மாத ஒப்பந்த அடிப்படையில் நடுவராக பணியாற்ற வியாழக்கிழமை (28) மூதூரைச் சேர்ந்த சிஹான் சுஹூத் பயணமானார்.

இவர் மூதூர் மத்திய கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி மற்றும் மாவனல்லை ஸாஹிரா கல்லூரிகளின் பழைய மாணவராவார்.

2016 ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் சபையினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட நடுவர் போட்டிப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்தி பெற்று மூதூரின் முதலாவது இலங்கை கிரிக்கெட் நடுவராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.





கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் மூதூரின் கடின பந்து கிரிக்கெட் வளர்ச்சிக்கு முறையான திட்டங்கள் பல வகுத்து மூதூர் வெஸ்டர்ன் வோறியஸ் எனும் அணியினை உருவாக்கி மாவட்ட மட்டத்தில் பலமான அணியாக அதனை வளர்த்து பின்னர் மூதூரில் பல முன்னணி கடின பந்து கிரிக்கெட் கழகங்கள் தோற்றம் பெற இவர் காரணமாக இருந்தார்.

மூதூர், திருமலை மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல புதிய நடுவர்களை பயிற்றுவித்து 2019 இல் இடம்பெற்ற இலங்கை நடுவர்கள் (ACUSL) சங்க பரீட்சையில் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ஆர்வலர்கள் 14 பேர் ஒரே தடவையில் சித்தி பெற காரணமாக இருந்தார்.

மூதூர் மத்திய கல்லூரியின் முழு நேர கிரிக்கட் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய சிஹான் சுஹூத் திருமலை ரத்ன ஜோதி வித்யார்த்தன கல்லூரியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றினார்.

பார்சிலோனா கழகத்துக்கு

# வியனல் மெஸ்ஸி திரும்பி வருவது சாத்தியமில்லை



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவுக்கு அவ்வணியின் முன்னாள் அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி திரும்புவது தற்போது சாத்தியமற்றது என அவ்வணியின் முகாமையாளர் ஸ்கெவி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் 35 வயதான மெஸ்ஸியை மீளக் கொண்டு வருவதற்கான கதவை உறுதியாக ஸ்கெவி சாத்தியிருக்கவில்லை.

பார்சிலோனாவில் மகிழ்ச்சியான முடிவை மெஸ்ஸி கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவது தனது பொறுப்பு என தான் கருத்திற்கொள்வதாக பார்சிலோனா தலைவர் ஜோன் லபோர்ட்டா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

# பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டுவருவது எவ்வாறு இடம்பெறுகின்றது?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2022 ஜூலை 28 ஆம் திகதி வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பாராளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடப்புப் பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டமையைக் காணமுடியும்.

இவ்வாறு பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரொன்றை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பில் வரலாற்றுரீதியான மற்றும் பிரயோகரீதியான பின்னணி பற்றிக் கண்டறிவது முக்கியமானதாகும்.

**கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரம் யாருக்குக் காணப்படுகின்றது?**

அரசியலமைப்பின் 70(1) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கும், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் மற்றும் கலைக்கும் பூரண அதிகாரம் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது.

**புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் தினம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?**

அரசியலமைப்பின் 70(3) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத்திலேயே (வர்த்தமானி அறிவித்தல்) புதிய கூட்டத்தொடருக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும். அந்தத் திகதி கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு தினமாக இருக்க வேண்டும்.

எனினும், பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்து மீண்டும் ஆரம்பிக்கும் திகதியை பிரகடனப்படுத்தியிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைப்பதற்கு அரசிலமைப்பின் 70(3)(i) உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, மீண்டும் பிரகடனம் (வர்த்தமானி அறிவித்தல்) ஒன்றின் மூலம் அவ்வாறு பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு எதிர்பார்க்கும் தினத்தைப் பிரகடனப்படுத்தப்படுவதுடன், குறித்த பிரகடனத்தின் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குப் பிந்திய ஒரு தினத்தில் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

**கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவருவதனால் பாராளுமன்றத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்படுகின்றனவா?**

பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரும் போது, அதன் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்படுவதாக பலர் கருதுகின்றனர். எனினும் அது அவ்வாறு இடம்பெறுவதில்லை.

கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது, சபாநாயகர் தொடர்ந்தும் தனது பணிகளை மேற்கொள்வார். அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்வுகளில் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அவர்களது உறுப்பினர் பதவிகள் அவ்வாறே காணப்படுகின்றது. எனினும், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது அதுவரை பாராளுமன்றத்தில் காணப்பட்ட அனைத்து அலுவல்களும் இடைநிறுத்தப்படுவதுடன் குற்றப்பிரேரணை (Impeachment) தவிர்ந்த அதுவரை சபையில் இடம்பெற்றுவந்த அனைத்து செயற்பாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

எனினும், குறிப்பிட்ட ஒரு



விடயம் தொடர்பாக சட்ட மூலமொன்று, பிரேரணையொன்றோ அல்லது கேள்வியொன்றோ ஒரே கூட்டத்தொடரில் இரண்டாவது முறையாக முன்வைக்க முடியாது. ஆனால், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் எதிர்வரும் கூட்டத்தொடருக்கு கொண்டு செல்ல வாய்ப்பு உள்ளது.

"பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொணரப்பட்டுள்ளவையும் பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவுசெய்யப்படாதிருந்தவையுமான எல்லாக் கருமங்களும், அடுத்த அமர்வின் போது, விட்ட நிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம்." என அரசியலமைப்பின் 70(4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் இந்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அலுவல்கள் இரத்துச் செய்யப்படுவதில்லை. இதன்போது, பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே எதிர்வரும் அலுவல்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அரசாங்கத்தின் அலுவல்களை சபை முதல்வர் தீர்மானிப்பதுடன், தனியார் உறுப்பினர் சட்டமூலம் அல்லது பிரேரணை என்பவற்றை மீண்டும் புதிதாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் போது ஒழுங்குப் பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சபை அலுவல்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமானால் அவற்றை மீண்டும் பட்டியலிடுவது அவசியமாகும்.

**பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது அனைத்துக் குழுக்களும் இரத்தாகின்றனவா?**

பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது பாராளுமன்ற குழுக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது அனைவருக்கும் எழும் கேள்வியாகும். இதில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 109, 111(2), 124(5), 125(1) என்பவற்றுக்கு அமைய முறையே பாராளுமன்ற விசேட குழுக்கள், துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் இணைப்புக் குழு தவிர்ந்த ஏனைய அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் போது மீண்டும் நியமிக்கப்படுகின்றன. இங்கு நிலையியற் கட்டளை 125(1) க்கு அமைய இணைப்புக் குழுவுக்கு உறுப்பினர்கள் பதவியடிப்படையில் (சபாநாயகர், பிரதி சபாநாயகர் போன்ற பதவிகளின் அடிப்படையில்) நியமிக்கப்படுவதனால் அதில் மாற்றம் ஏற்படுவதில்லை.



பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 114 க்கு அமைய ஒவ்வோர் புதிய கூட்டத்தொடரின் போதும் தெரிவுக்குழு புதிதாக நியமிக்கப்படுகின்றது. இதில் சிறப்பு நோக்கங்களுக்கான கீழே குறிப்பிட்டுள்ள அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது இரத்தாகின்றன.

- அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்
- சட்டவாக்க நிலையியற் குழு
- பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு
- நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு
- சபைக் குழு
- ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு
- அரசாங்க கணக்குகள் பற்றிய குழு
- அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு
- அரசாங்க நிதி பற்றிய குழு
- பொது மனுக்கள் பற்றிய குழு
- பின்வரிசை குழு

**பாராளுமன்றத்தில் புதிய கூட்டத்தொடரொன்று எவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்றது?**

பாராளுமன்றத்தில் புதிய கூட்டத்தொடரொன்று எவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்றது?

பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படும் போது வைபவரீதியாக திறந்துவைத்தல் அத்தியாவசியமானதொன்றல்ல. எனினும் புதிய கூட்டத்தொடர் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், அது கட்டாயம் ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெறும்.

பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடனம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது. அதற்கமைய ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்கவினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் ஆகஸ்ட் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அரசியலமைப்பின் 33(அ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும், அரசியலமைப்பின் 33(ஆ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் சடங்குமுறையான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

**அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் என்றால் என்ன?**

பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரினதும் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுகின்றது. இதன்போது ஜனாதிபதியினால் அவரது அரசங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் முன்வைக்கப்படும்.

கடந்த காலத்தில் இது மகா தேசாதிபதியால் வழங்கப்படும் அக்கிராசன உரை என்று அறியப்பட்டது.

1978 முதல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் கொள்கைப் பிரகடனம் இதுவரை விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டோ இல்லை.

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒவ்வோர் பாராளுமன்றத்திலும் ஆரம்பிக்கப்பட்ட புதிய கூட்டத்தொடர்களின் எண்ணிக்கை

1947 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை சுமார் 50 தடவைகள் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாராளுமன்ற பதிவுகள் குறிப்பிடுகின்றன. 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை 25க்கும் மேற்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு;

♦ 1978.09.07 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது பாராளுமன்றம் 1988.12.20 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் ஏழு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 1989.03.09 ஆம் திகதி ஆரம்பமான இரண்டாவது பாராளுமன்றம் 1994.06.24 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் ஐந்து கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 1994.08.25 ஆம் திகதி ஆரம்பமான மூன்றாவது பாராளுமன்றம் 2000.08.18 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் மூன்று கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 2000.10.18 ஆம் திகதி ஆரம்பமான நான்காவது பாராளுமன்றம் 2001.10.10 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் மூன்று கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 2001.12.19 ஆம் திகதி ஆரம்பமான ஐந்தாவது பாராளுமன்றம் 2004.02.09 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் இரண்டு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 2004.04.22 ஆம் திகதி ஆரம்பமான ஆறாவது பாராளுமன்றம் 2010.02.09 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் நான்கு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

(அவசரகால ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்காக கலைக்கப்பட்ட பாராளுமன்றம் 2010.03.09 மற்றும் 2010.04.06 ஆம் திகதிகளில் மீளக் கூட்டப்பட்டது)

♦ 2010.04.22 ஆம் திகதி ஆரம்பமான ஏழாவது பாராளுமன்றம் 2015.06.26 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் ஒரு கூட்டத்தொடரை மாத்திரம் கொண்டிருந்தது.

♦ 2015.09.01 ஆம் திகதி ஆரம்பமான எட்டாவது பாராளுமன்றம் 2020.03.02 ஆம் திகதி அது கலைக்கப்படும் வரையில் நான்கு கூட்டத்தொடர்களைக் கொண்டிருந்தது.

♦ 2020.08.20 ஆம் திகதி ஆரம்பமான ஒன்பதாவது பாராளுமன்றம் இற்றை வரை இரண்டு கூட்டத்தொடர்களை கொண்டுள்ளது.

---

குழுக்களுக்கிடையிலான கைகலப்பில்

## கூரிய ஆயுதமொன்றினால் ஒருவர் வெட்டிக் கொலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது கூரிய ஆயுதமொன்றினால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக எப்பாவல பியங்கரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியங்கரகம பொகுனுகம பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 25 வயதுடைய யாய 07, பொகுனுகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சைக்காக வேண்டி எப்பாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை எப்பாவல பியங்கரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## பொலன்னறுவையில் இராசாயன பசளை விநியோகம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**




பொலன்னறுவை மாவட்ட விவசாயிகளுக்கு சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான இராசாயன பசளை 90 வீதத்திற்கும் அதிகமாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக பொலன்னறுவை மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை பொன்னறுவை மாவட்டத்தில் 62000 ஹெக்டயாரில் சிறுபோக நெற்செய்கை செய்யப்படவுள்ளதுடன் அதற்குத் தேவையான 6203 மெட்ரிக் தொன் இரசாயன பசளை கிடைத்துள்ளதாகவும் பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டபிள்யு.ஏ.தர்மசிறி தெரிவித்தார்.

அதில் இதுவரை 5617 மெட்றிக் தொன் பிரிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய பசளை அலுவலகம், கமநல சேவை திணைக்களம், லக் உர நிறுவனம் மற்றும் மாவட்ட விவசாய சங்கம் என்பன இணைந்து அதனை நடைமுறைப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மாவட்டத்தில் நெற் செய்கைக்குத் தேவையான 94 வீதம் சேதனப் பசளையும் அதற்கு ஏற்ற வகையிலான திரவ பசளையும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் மாட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

---

## பேரிடர் தணிப்பு திட்டத்தை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்கும் வேலை திட்டம்

**( திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு அநுராதபுரம் நிருபர்கள்)**

தற்போதுள்ள அநுராதபுர மாவட்ட அனர்த்தத் திட்டத்தை மீளாய்வு செய்து பிராந்திய மட்டத்தில் மேலும் இனங்காணப்பட்ட அனர்த்தங்களைக் கொண்டு திட்டத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் (28) அநுராதபுர மாவட்ட செயலாளர் ஜனக ஜெயசுந்தர தலைமையில் இடம்பெற்றது.

அநுராதபுர மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு Good Neighbours அனுசரணை வழங்குகிறது.

பேரழிவுகள் ஏற்படாவிட்டாலும், இப்போது திட்டத்துடன் அதற்குத் தயாராக இருப்பது புத்திசாலித்தனமான ஒரு நடைமுறையாகும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டன. ( இது தொடர்பான அனைத்து அதிகாரிகளையும் ஒருங்கிணைத்து அதிகாரமளிப்பதன் மூலம் அநுராதபுரத்தை அனர்த்தமற்ற மாவட்டமாக மாற்ற முடியும் எனவும் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்த இங்கு கருத்து தெரிவித்தார்.

பேரிடர் சூழ் நிலைகளை ஆரம்பத்திலிருந்தே கண்டறிவதன் மூலம் பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க முடியும் எனவும் அநுராதபுர மாவட்டத்தில், அனர்த்தத் திட்டத்தை மீளத் தொகுத்து, அதனைத் திறம்படப் பயன்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலர் இந்த வேலைத் திட்டத்தில் ஈடுபட முடியும்.

இந்த சேவையை அனைத்து அதிகாரிகளும் இணைந்து செய்ய வேண்டும் என்றும் மாவட்ட செயலாளர் இதன் போது தெரிவித்தார்.

---





வரலாற்றுச் சிறப்புமிக்க உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழாவில் வெளிக்கொடியேற்ற நிகழ்வு வியாழக்கிழமை காலை(28) நடைபெற்றது. இதன்போது பல பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)